MAHAANS
PICK & PRESS OIL MILL
ORGANIC BULK STORE
(416) 293 4010
kathir@mahaanspickandpressoilmill.com
www.mahaanspickandpressoilmill.com
5-5635 Finch Ave East,
Scarborough Ontario, Canada MIB5K9
ORGANIC - HEALTHY - TASTY

# தேசம்

NATION THE THESAM

Latika Gold House
(647) 996 5922
(416) 423 7555
www.latikagoldhouse.ca
Majestic City Plaza
L7 - 2900 Markham Road
Scarborough ON
M1X 0C8
Follow us
Latika Gold House

Issue - 01 | Once a Month | March 2024




## ஒரு அசாதாரண “அரசராக” விளங்கிய கனடாவின் 18வது பிரதமர் பிரையன் மல்ரோனி மறைந்தார்

கனடியத் தமிழர்கள் அன்னாருக்கு நன்றி உணர்வுடன் அஞ்சலி செலுத்தினார்கள்.

## ராஜபக்சக்களின் விருப்பத்தின்படி... இலங்கையில் முதலில் பொதுத் தேர்தல் நடத்தப்படுமா?





## ஜெனிவா - ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் முன்னாள் பிபிசி செய்தியாளரும் ‘தேசம்’ பத்திரிகையின் தென்னாசியச் செய்தியாளருமான சிவா பரமேஸ்வரன் உரை நிகழ்த்தினார்

fssai 12421999000289
தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக
உலகெங்கும்...
Tasty தமிழா
வியாபார தொடர்புகளுக்கு...
கனடா .: 647 762 9512 | இந்தியா .: +91 7845 00 6977
விரைவில்...



# இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாக்க அறிவார்ந்த சமூகம் கட்டி எழுப்பப்பட வேண்டும் பிலிப் திஸாநாயக்க

இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் பாதிக்கப்படுவோருக்கு வழிகாட்டவும் மனித உரிமைகள் தொடர்பான கல்வியை அறிந்திருக்கக் கூடிய அறிவார்ந்த சமூகம் கட்டி எழுப்பப்பட வேண்டும் என right to life human right center தலைவர் பிலிப் திசாநாயக்கா தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற right to life human rights centre ன் மனித உரிமைகள் பாதுகாவலர்களை உருவாக்கும் செயல் அமர்வின் இரண்டாம் நாள் பயிற்சி அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசியல் அமைப்பில் காணப்படுகின்ற மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதற்கு கூட இலங்கையில் போராட வேண்டிய நிலைமையை ஏற்பட்டுள்ளது.

ஒரு மனிதன் பிறப்பினால் உரிமைகளை அனுபவிப்பதற்கு உரித்துடையவனாகக் காணப்படுகின்ற நிலையில் அவனது உரிமைகள் பாதுகாப்பதற்கும் அவை மீறப்படும் போது பரிகாரம் காணுவதற்கும் இலங்கை அரசியலமைப்பில் சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படும் போது அதனை ஆராய்ந்து அவற்றிற்கு எதிராக குரல் கொடுப்பதற்கு மனித உரிமைகள் பாதுகாவலர்களை உருவாக்க வேண்டிய காலத்தின் தேவை எழுந்துள்ளது.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் வாழும் மக்களின் உரிமைகள் மிகவும் பாதுகாக்கப்படுகின்ற நிலையில் வளர்ச்சி அடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

மனித உரிமைகள் கல்வி என்பது ஒவ்வொரு மனிதனும் இயல்பாகவே அறிந்திருக்க வேண்டிய ஒரு விடயம் ஆனால் எமது நாட்டில் பலர் தமது மனித உரிமைகள் மீறப்படும் போது யாரிடம் முறைப்பாடு செய்வது என்ன உரிமைகள் மீறப்பட்டிருக்கிறது என்பது கூட அவர்கள் அறியாத நிலை காணப்படுகிறது.

எமது அமைப்பானது மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் உள்ள 16 மாவட்டங்களிலும் மனித உரிமைகள் முதலுதவி மையங்களை ஆரம்பித்துள்ளோம்.

இந்த மையங்கள் ஊடாக மனித உரிமைகள் பாதிக்கப்படுவோரை இனம் கண்டு அவர்களுக்கு ஆரம்ப முதலுதவியை வழங்குவதற்கு மனித உரிமைகள் பாதுகாவலர்களை உருவாக்கி பயிற்சி அளித்து வருகிறோம்.



மனித உரிமைகள் பாதுகாவலர்கள் ஊடாக அந்தந்த மாவட்டங்களில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் அறிக்கையிடப்பட்டு அவர்களுக்குரிய நீதியையும் பாதுகாப்பையும் வழங்குவதற்குரிய ஆரம்ப முதலு உதவியை வழங்க உள்ளோம்.

ஆகவே எமது செயற்பாடானது யாழ் மாவட்டத்தில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சமூகம் ஒன்றை கட்டி எழுப்புவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்துடன் இணைந்து எமது செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.







**Thesam Publishers** **தேசம் வெளியீட்டாளர்கள்**

EDITORIAL TEAM - THESAM
GRAPHIC: HEVEN
TECHNICAL: Y. INTHUNATHAN
PRINTERS: Web News Printing Inc.
MARKETING & DISTRIBUTION MANAGER - Ramsankr Sivanathan: 647.891.7725

Phone: 647 848 1113
Unit #201, 3967 Lawrence Ave East, Scarborough, ON, M1G 1S2
Email: info@thethesam.com www.thethesam.com


## பங்குனி 2024

உங்கள் கைகளின் தவழும் எமது 'தேசம்' மார்ச் மாதத்தில் மலர்கின்றது. உலகெங்கும் தமிழ் ஊடகங்கள் பல்கிப் பெருகியுள்ள நிலையில் 'தேசம்' மலர்தலின் முன்னால் உள்ள தேவைகள் என்ன? பயன்பாடுகள் எவை? என்றெல்லாம் வினாக்கள் எழுந்து நிற்க வாய்ப்புக்கள் அதிகம்.

இணைய வழி ஊடகங்கள் கைத்தொலை பேசிகள் வாயிலாகக் கூட எம் கண்களுக்கு எதிரே வந்து விட்டனவே. எதற்கு அச்சில் வரவேண்டும்? என்று நீங்கள் எம்மை நோக்கி பார்வையால் கேள்வி கேட்பது எமக்குப் புரிகின்றது.

'தேசம்' தோன்றியது, ஒரு தேசத்தில் வாழும் தமிழர்களுக்காக மட்டுமல்ல. எமது முன்பக்கத்தில் காணப்படும் 'தேசம்' எனும் பெயரில் காணப்படும் பனைமரமும் மேபிள் இலையும் இரண்டு தேசங்களைக் குறிக்கின்றன என்பதை நாம் எழுதித் தான் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதல்ல.

எமது தாய் மண்ணிலும் நாம் புலம் பெயர்ந்து வாழும் கனடிய தேசத்திலும் அச்சில் வரும் தினசரிப் பத்திரிகைகளோ அன்றி வாராந்த, மாதாந்தப் பத்திரிகைகளோ பல சவால்களுக்கு மத்தியில் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டே உள்ளன. அச்சாகி வரும் பத்திரிகையை எப்படியோ பெற்று அதனை வாசிப்பதால் ஏற்படும் 'சுகம்' பற்றிய தங்கள் அனுபவங்களை 'தேசம்' குழுவினரோடு பகிர்ந்து கொண்டவர்கள் ஏராளம்!, ஏராளம்!. எனவே தான் பத்தோடு பதினொன்றாக 'தேசம்' மாதம் ஒரு தடவை, அச்சில் அழகியதாய். தங்கள் கரங்களில் தவழும். இதைத் தவிர. தினமும்

இணையத்தில் பார்த்தும் படித்தும் பரவசம் கொள்ளவும் தயாராக உள்ளது.

'தேசம்' என்கின்ற நம் செய்திப் பலகை எமது தாயகத்திலும் பிறநாடுகளில் புலம் பெயர்ந்து வாழுகின்ற ஈழத்தமிழர்களின் எண்ணங்களை மாத்திரம் தாங்கிவரும் என்பதற்கு அப்பால் நாம் என்றும் 'தாய்த் தமிழகம்' என்று எம் நாவால் உணர்வோடு உச்சரிக்கும் தமிழ் நாட்டு தமிழ் உறவுகளையும் நேசிக்கும் தகவல்களைக் கொண்டவையாக விளங்கும் என்பதையும் உறுதியாகப் பதிவு செய்கின்றோம்.

எங்கள் பனை மண்ணையும் மேபிள் இலைகள் பச்சையாயும் மஞ்சளாயும் எம்மை மகிழ்விக்கும் மண்ணையும் அதற்கு மேலாய் உலகத்தையும், செய்திகள், கட்டுரைகள் மற்றும் இலக்கியங்கள் மூலமாய் நீங்கள் அடிக்கடி தரிசிக்க எம்' தேசம்' பாலம் அமைக்கும்

**மீண்டும் இதே பக்கத்தில் சந்திக்கும் வரை... நன்றி!.**

# சட்டத்தின் பிரகாரம் தேர்தலை நடத்த வேண்டியது இலங்கை ஜனாதிபதியின் கடமை

## முதற்தடவையாக ரணிலை விமர்சனம் செய்த சுமந்திரன் எம்.பி

யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமையன்று எம். ஏ. சுமந்திரன் எம்பி ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார்.

அங்கு உரையாற்றிய எம். ஏ. சுமந்திரன் 'மக்கள் ஆணையற்ற ஜனாதிபதியே தற்போது நாட்டில் இருக்கிறார். எனவே சட்டத்தின் பிரகாரம் அரச தலைவர் தேர்தல் நடத்த வேண்டியது அவசியமானது' என்று விமர்சனம் செய்துள்ளார்.

அண்மையில் ரணில் விக்கிரமசிங்காவோடு ஒன்றாக அருகருகில் அமர்ந்திருந்து கொழும்பு றோயல் கல்லூரியில் கிரிக்கட் ஆட்டத்தை ரசித்த சுமந்திரன் அவரை மக்கள் ஆணையற்றவர் என்று விமர்சனம் செய்துள்ளது கொழும்பில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்தோடு தற்போது உள்ள மக்கள் ஆணையில்லாத நாடாளுமன்றம் வெகு விரைவில் கலைக்கப்பட்டு தேர்தல் நடாத்தப்பட வேண்டும் எனவும் சுமந்திரன் கோரியுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி சொல்வது ஒன்று செய்வது இன்னொன்றாக இருக்கிறது. எனவே நடத்த வேண்டிய தேர்தல்களை கூட நடத்தாமல் இருக்கும் இந்த ஜனாதிபதி இனியும் தாதமிக்காது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை உடனடியாக நடாத்த வேண்டுமென்றார் சுமந்திரன்

அரச தலைவர் தேர்தலில் தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்துவதற்கு பேசப்பட்டு வருவது தொடர்பில் கேள்வி எழுப்பிய போது தமிழரசுக் கட்சி இதைப்பற்றி இன்னமும் கலந்துரையாடவில்லை எனவும் தேர்தல் அறிவிக்கப்படுகிற போது இது சம்மந்தமாக கலந்துரையாடி முடிவெடுப்போம் என பதிலளித்துள்ளார்.

மேலும் பொது வேட்பாளரோ தனி வேட்பாளரோ அது எவருக்கும் இருக்கிற உரிமை. யாரும் தேர்தலில் போட்டியிடலாம். எவரையும் போட்டியிடக் கூடாது என்று சொல்லுகிற உரிமை எவருக்கும் கிடையாது.

இந்த பொது வேட்பாளர் தொடர்பில் எமது தமிழரசுக் கட்சி எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை. முதலில் தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும். யார் யார் வேட்பாளர்கள் என தெரிய வேண்டும். அதைத் தொடர்ந்து நாங்கள் கலந்துரையாடி முடிவெடுப்போம்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவை வழங்குவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின்




பிரதி தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ள விடயம் குறித்து கேட்ட போது அவர் மட்டுமல்ல ஒவ்வொரு கட்சியினரும் எல்லா மக்களின் வாக்கும் தங்களுக்கு தான் என்று சொல்லுவார்கள். ஆகையினால் அதையெல்லாம் பெரிதாகக எடுத்துக் கொள்ள வேண்டிய தேவையில்லை. ஆகையினால் யாருக்கு வாக்களிப்பது என மக்கள் தீர்மானிப்பார்கள் என்றார சுமந்திரன்.

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கார்த்திகைப்பூ வடிவில் இல்ல அலங்காரம் செய்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பாராட்டுக்கள் குவிகின்றன

## ஆனால் அவர்களை விசாரணைக்கு அழைத்துள்ள "கூலி"ப் பொலிஸ்!

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் இல்ல அலங்காரம் தொடர்பில் விசாரணைக்கு வருமாறு தெல்லிப்பழை பொலிஸ் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.



மேற்படி கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த இல்லங்களில் ஒன்றின் முகப்பில் 'கார்த்திகைப் பூ' அழகிய முறையில் மிகுந்த மரியாதையுடன காட்சிப்படுத்தப் பட்டிருந்த காரணத்தாலேயே இந்த விசாணைக்கான அழைப்புக் கிடைத்துள்ளதாகவும் யாரோ 'கயவர்கள்' பொலிசாருக்கு இந்த விடயத்தை எடுத்துச் சென்றிருக்கலாம் என்றும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

குறித்த இலத்தின் பொறுப்பாசிரியர்கள் மற்றும் கல்லூரி அதிபர் மற்றும் மாணவர் தலைவர்கள் சிலர் என பலரது பெயர்களைக் குறிப்பிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு பொலிஸ் நிலையம் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் இந்த செய்தி எழுதப்படும் நேரத்தில் விசாரணைகளின் முடிவுகள் எமது ஆசிரிய பீடத்திற்கு கிடைக்கவில்லை.

---

# யாழ்ப்பாணத்தில் காணிகளை "அபகரிக்க முயலும்" நகர அபிவிருத்தி அதிகாரசபை



## அபிவிருத்தி என்ற போர்வையில் எமது நிலத்தை நாம் இழக்கமாட்டோம் என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன்

யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய என கடற்கரையோரமாக உள்ள அரச நிலங்களை தமக்கு வழங்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை யாழ்ப்பாண மாவட்ட செயலக அபிவிருத்தி குழுவில் அனுமதி கேட்டுள்ளது.

குறித்த விடயம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடலின் போது நகர அவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் குறித்த திட்டத்துக்காக காணிகளை விடுவிப்பது தொடர்பில் அனுமதி கேட்டு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய என ஊர்காவற்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பருத்தித் தீவில் 10 ஏக்கர் அரச காணியும் அதே பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கரம்பன் பகுதியில் 1.5 ஏக்கர் காணியும் வலி வடக்கு காங்கேசன் துறை பகுதியில் 10.7 ஏக்கர் அரச காணிகளை தமக்கு வழங்குமாறு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர்.

குறித்த மூன்று பகுதிகளிலும் இடம்பெறும் சுற்றுலா அபிவிருத்தி தொடர்பில் விளக்கப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்ட நிலையில் குறித்த பகுதிகளில் முதலீடு செய்பவர்கள் யார் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற தகவல் வழங்கப்படவில்லை.

இதன் போது கருத்தை தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் அபிவிருத்தி என்ற போர்வையில் எமது நிலங்களை மத்திய அரசாங்கத்திற்கு வழங்குவது ஏற்கக் கூடிய விடயம் அல்ல.



அது மட்டுமல்லாது குறித்த பகுதிகளில் முதலீடு செய்பவர்கள் யார் என்பது தொடர்பில் எமக்குத் தெரியாது சில வேளைகளில் முதலீட்டாளர்களின் நோக்கம் பிழையாக இருந்தால் நாங்கள் அபிவிருத்தி குழுவில் காணி வழங்குவதற்கு அனுமதி தந்த பின்னர் நிறுத்த முடியுமா என கேள்வி எழுப்பினார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்படும் போது தெளிவான ஒரு விளக்கத்தை எமக்கு தெரிவிக்க வேண்டும்.

சுற்றுலாத்துறை என்ன முதலீடு செய்யப் போகிறார்கள் யார் இலங்கையைச் சேர்ந்தவர்களால் அல்லது வெளிநாட்டைச் சேர்ந்தவர்களா காலப்பகுதி என்ன என ஒன்றுமே தெரியாது எவ்வாறு அனுமதி வழங்குவது என கேள்வி எழுப்பினார்.

இதன்போது கருத்து தெரிவித்த நகர அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட அதிகாரி குறித்த திட்டங்களுக்காக முதலீட்டாளர்களின் விண்ணப்பம் கோரப்பட்டடே உள்ளீர்கப் படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இதுதான் போது கருத்து தெரிவித்த வடமாகன ஆளுநர் பி எஸ் எம் சாள்ஸ் குறித்த பகுதிகளில் என்ன அபிவிருத்தி செய்யலாம் என ஒரு விடயத்தை மட்டும் கூறாமல் இரண்டு மூன்று விடயங்களை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கப் படத்துடன் தமிழ் மொழிபெயர்ப்புடன் வழங்குங்கள் என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஒருங்கிணைப்பு குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிறிதொரு திகதியில் குறித்தபடி அந்த தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்ட பின்னர் தீர்மானம் எடுக்க முடியும் என தெரிவித்தார்.

# தமிழர் விவகாரத்திற்கான தீர்வுகுறித்து பேச ஜனாதிபதி வேட்பாளர்கள் தயாரில்லை

- வி. தேவராஜ் -- மூத்த ஊடகவியலாளர் -



## அடுத்து என்ன? தமிழா! விரைந்து விடை தேடு.

2009 ஆம் ஆண்டு போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது அதாவது கிளிநொச்சி படைத்தரப்பின் கைகளுக்கு வந்தபோது 'அடுத்து என்ன' 'What Next' என்ற வினா வெளி நாட்டுத் தூதரக உயர் அதிகாரிகள் மட்டத்திலும் தமிழ் சிங்கள புத்திஜீவிகள் மட்டத்திலும் பெரிதளவில் பேசப்பட்டது.

'அடுத்து என்ன' 'What Next' என்ற கேள்வியின் உள்ளார்ந்த கருப் பொருளாக தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் குறித்த வினாவுக்கு விடை காணப்பட வேண்டிய அவசியத்தின்பால் கொண்ட அக்கறையின் பாற்பட்டதாக அமைந்தது.

'மனிதாபிமானத்துக்கான போரினை' நடத்திக் கொண்டிருந்த மகிந்த ராஜபக்ச அரசாங்கம் போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இன விவகாரத்துக்கான தீர்வாக 13 குறித்து மாத்திரம் பேசவில்லை 13 பிளஸ் என்றும் பேசி வந்தது. தென்னிலங்கையிலும் இன விவகாரத்துக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்ற மனோபாவத்துடன் சிங்கள மக்களும் பேசினர்.

ஆனால் கிளிநொச்சியின் வீழ்ச்சியுடன் இன விவகாரத்துக்கான தீர்வு குறித்த தென்னிலங்கையின் மனப் போக்கில் சடுதியான மாற்றம் ஏற்பட்டது. இன விவகாரம் என்று ஒன்று இல்லை சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பொதுவான பிரச்சனைகளே உள்ளன. அத்தகைய பிரச்சனைகள் குறித்து இரு பகுதியினரும் இணைந்து தீர்வு காணும் பயணத்தைத் தொடரலாம் என்ற நிலைப்பாட்டுக்கு தென்னிலங்கை வந்தது. இந்த நிலைப்பாட்டினை அரசியல்வாதிகள் ஆட்சியாளர்கள் மற்றும் தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் இதனை ஒரு பேசு பொருளாக தென்னிலங்கை மக்கள் மத்தியில் பரப்பத் தொடங்கினர்.

2009க்குப் பின் சிங்கள ஆட்சியாளர்களுக்கெதிராக 'அரகலயாக் கள்' கிளர்ந்தெழும் வரை இதே நிலைப்பாட்டில் நின்ற தென்னிலங்கை தமது போராட்டங்களுக்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்தது. அரகலயாக்களின் 'சிஸ்டம் சேன்ஜ்' போராட்டத்திற்கு மலையகத்தில் கணிசமான அளவில் ஆதரவு காட்டப்பட்ட போதும் அரகலயாக்கள் குறித்து வடக்குக் கிழக்கில் எவரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. தென்னிலங்கை கோருகின்ற 'சிஸ்டம் சேன்ஜ்' தமிழ் மக்களின் வாழ்க்கையில் மாற்றத்திற்கு வித்திடாது. இலங்கையில் கடந்த 75 வருடங்களாக ஆட்சி செய்து வரும் சிங்கள ஆட்சியாளர்களின் முகத் திரையைக் கிழித்து நிர்வாணமாக்கிக் காட்டிய போதிலும் தென்னிலங்கை சிங்கள ஆளும்வர்க்கத்தின் பின்னால் மாறி மாறி அணிதிரண்டு அவர்களின் கைகளைப் பலப்படுத்தினர். தமிழ் மக்கள் குறித்தோ அவர்களின் அரசியல் அபிலாசைகள்பற்றியோ சிங்கள அரசியல்வாதிகள் போன்று பெரும்பாலான சிங்கள மக்களும் கிஞ்சித்தும் அக்கறை இன்றி இருந்தனர். அதாவது தமிழ்த்தேசியவாதம் முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட போரில் 2009 மே 17 ஆம் திகதியுடன் சாகடிக்கப்பட்டுப் புதைக்கப்பட்டுவிட்டது என்பதே தென்னிலங்கையின் நிலைப்பாடாக இன்றுவரை உள்ளது.

இத்தகைய நிலைப்பாட்டுக்குள்ளும் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் போரினை நடத்திய மகிந்த ராஜபக்ச மற்றும் சரத்பொன்சேகா ஆகிய இருவரும் பிரதான வேட்பாளர்களாக களத்தில் நின்றனர். இந்தத் தேர்தலிலும் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்கள் சரத்பொன்சேகாவுக்கு வாக்களித்த பிரதேசங்களாக வெளிப்பட்டன.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில்விக்ரமசிங்க கூட்டணியால் மைத்திரிபால சிறிசேனவும் மறு புறம் மகிந்த ராஜபக்சவும் பிரதான வேட்பாளர்களாகக் களம் இறங்கினர்.

இந்தத் தேர்தலிலும் தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் தீர்மானமிக்க வாக்குகளாக மாறி மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெற வைத்தது. மைத்திரிபால சிறிசேன 51.28 சதவீத வாக்குகளையும் மகிந்த ராஜபக்ச 47..58 சதவீத வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர்.

ஆனால் நல்லாட்சி வேண்டும் என்ற சுலோகத்துடன் ரணில் அமைத்த கூட்டணிக்குள் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தி தமிழ் மக்களின் ஆதரவைக் கோரினர். நல்லாட்சி அரசாங்கம் அமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு மூச்சுடன் களத்தில் இறங்கி மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற உழைத்தது. தேர்தல் காலங்களில் ரணில் தரப்பு முன் வைத்த ஊழலுக்கெதிரான பிரசாரங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கிய வாக்குறுதிகளும் நல்லாட்சியில் காணாமல் போயின.

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோதாபய ராஜபக்ச 69 இலட்சத்து 24ஆயிரத்து 255 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். தேர்தல் களத்தில் நின்ற மற்றொரு முக்கிய வேட்பாளரான சஜித் பிரேமதாசா 55 இலட்சத்து 64 ஆயிரத்து 239 வாக்களைப் பெற்று தோல்வி அடைந்தார். சஜித் பிரேமதாச தோல்வி அடைந்த போதும் அவர் பெற்ற வாக்குகளில் பெரும்பாலான வாக்குகள் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இருந்தே கிடைத்துள்ளன.

2009 இல் போர் மொனிக்கப்பட்ட பின் நடைபெற்ற தேர்தல்கள் அனைத்திலும் தமிழ பேசும் மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டுள்ள போதும் இவர்களின் வாக்குகள் ராஜபக்ச அணியினரை நிராகரிப்பதாகவே அமைந்தன.

இந்த ஆண்டு நடைபெறும் என தற்போது கூறப்படும் ஜனாதிபதித் தேர்தலிலும் நல்லாட்சி மக்களாட்சி மற்றும் ஊழல் இல்லா ஆட்சி என்று மீண்டும் பேசப்படுகின்றது. பொருளாதார மீள் எழச்சி குறித்து ரணில் தரப்பு பேசுகின்றது. திகதி குறிப்பிடப்படாத 2024 ஜனாதிபதி தேர்தல் களத்தில் அநுராகுமார திசாநாயக்க சஜித் பிரேமதாச மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் முக்கிய வேடபாளர்களாக களத்தில் தேர்தல் பரப்புரைகளை மேற் கொள்கின்றனர்.

கருத்துக் கணிப்புக்களின்படி அநுராகுமார திசாநாயக்க 50 சதவித ஆதரவைப் பெற்றுள்ளதாகவும் சஜித் பிரேமதாச 30 சதவீத ஆதரவைப் பெற்றுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ரணில் விக்ரமசிங்க 8 சதவீத ஆதரவுடன் களத்தில் நிற்பதாகவும் கருத்துக் கணிப்புகள் சுட்டி நிற்கின்றன. இந்தக் கருத்துக் கணிப்பில் 18 சதவீதம் ஒதுங்கி நிற்கின்றது. உண்மையில் இந்த 18 சதவிதம் எவருடைய வெற்றியை தீர்மானிக்கும் சக்தியாக மாறப் போகின்றது என்பதிலேயே வெற்றி தோல்வி தங்கியுள்ளது. குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் 2024 ஜனாதிபதித் தேர்தலில் தீர்மானமிக்க வாக்குகளாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தமிழ் வாக்குகள் வெற்றியை தீர்மானிக்கும் சக்தி படைத்தது என்பது தேர்தல் களத்தில் நிற்கும் அரசியல்வாதிகளுக்கு நன்றாகவே தெரியும். ஆனால் அவர்களில் எவரும் தமிழர் விவகாரத்துக்கான தீர்வு குறித்துப் பேசுவதற்குத் தயாராக இல்லை.

கடந்த காலங்களில் குறிப்பாக 2009க்குப் பின் தமிழ் மக்கள் வாக்களித்தனர் என்பது உண்மைதான். ஆனால் இதனால் தமிழர் விவகாரத்திற்கு தீர்வு கிடைத்ததா என்றால் இல்லை. மக்கள் வெறும் வாக்களிப்பு இயந்திரங்களாக மட்டுமே இருந்துள்ளனர். ஆனால் தமிழ் அரசியல் வியாபாரிகள் ஆதாயம் அடைந்தனர் என்பதை மறுப்பதற்கில்லை.

தென்னிலங்கை அரசியல்வாதிகளைப் பொறுத்து வாக்குகளை தமிழ் மக்களுக்குத் தெரியாமலே விலைபேசி வாங்குபவர்களாகவும் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் அறியாதவகையில் தமிழர்களின் வாக்குகளை தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு கைமாற்றும் முகவர்களாக தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றனர்.

'அரகலய' போராட்டம் கடந்த 75 வருடகால சிங்கள ஆளும் வர்க்கத்தை நிராகரித்து நிற்கின்றது. சிங்கள ஆளும் வர்க்கம் ரணிலை முன்னிறுத்தி தம்மை தற்காலிகமாக பாதுகாத்துக் கொண்டுள்ளது. அே- தவேளையில் 'அரகலயாக்களை' தற்காலிகமாக அடக்குவதிலும் வெற்றி பெற்றுள்ளது. ஆனால் 'அரகலயாக்கள்' தென்னிலங்கையில் விதைத்துள்ள கருத்தியலை சிங்கள ஆளும் வர்க்கத்தினால் முற்றாக கருவறுக்க முடியவில்லை. தென்னிலங்கை மக்கள் வாக்குச் சீட்டுக்களை கைகளில் வைத்துக் கொண்டு இன்னொரு 'அரகலய' புரட்சிக்கு தயாராக உள்ளனர்.

ஆனால் தமிழ் மக்கள் 2009க்குப் பின் தற்போதைய 2024 வரை அடுத்து என்ன? என்ற கேள்விக்கு விடை காண முடியாது கடந்த 15 வருடங்களை தொலைத்துவிட்டு உரிமைகளையும் மண்ணையும் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் மதத்தையும் பறி கொடுத்துக் கொண்டு நிற்கின்றனர்.

இந்த இழப்புக்களை மீட்டெடுக்கவாவது தமிழ் மக்கள் அடுத்து என்ன? என்ற வினாவுக்கான விடையை விரைந்து தேடியாக வேண்டும்.

# மக்கள் எதிர்கொள்ளும் பாரிய துன்பங்களுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டுமாக இருந்தால் இலங்கையின் ஆட்சி முறைமையில் பாரிய மாற்றம் தேவை

## மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை



எமது இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் பாரிய துன்பங்களுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டுமாக இருந்தால் இலங்கையின் ஆட்சி முறைமையில் பாரிய மாற்றம் தேவை. இந் நாட்டில் தற்கொலை தாக்குதல்கள் நடந்து சரியாக 5 வருடங்கள் கடந்துள்ள போதும் இந்த தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்களை விசாரிக்க பல்வேறு குழுக்கள் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட போதிலும் நாங்கள் இதுவரை உண்மையை அறிய முடியவில்லை என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் பண்டிகையை ஒட்டி அவர் விடுத்த செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த செய்தியில் மேலும் குறிப்பிடுகையில், உயிர்ப்பு ஞாயிறு என்பது கிறிஸ்தவ நம்பிக்கையின் மறை உண்மையும், மையமும் ஆகும். உயிர்த்தெழுந்த இறைவன் தம்முடைய உயிர்த்தெழுதலின் பின் சீடர்களுக்கு தோன்றிய போது அவர்களுக்கு கொடுத்த அதே அன்பையும், மகிழ்ச்சியையும் நமக்கு இன்று தருகிறார்.

இயேசு எப்போதும் எம்மோடும் எம் மத்தியில் இருப்பதையும்,நம்முடைய எல்லாத் தேவைகளிலும் அக்கரை கொள்வதையும் மீள் உறுதிப்படுத்த வருகிறார்.

நமது நாடு சமூக பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக மிகவும் இக்கட்டான நிலையில் உள்ள வேளையில் இவ் ஆண்டு ஈஸ்டர் பண்டிகையை நாம் கொண்டாடுகிறோம்.

எமது மக்கள் எதிர் கொள்ளும் பாரிய சிரமங்களுக்கும் துன்பங்களுக்கும் நிரந்தர தீர்வு காண வேண்டுமாக இருந்தால் எமது ஆட்சி முறைமையில் பாரிய மாற்றம் தேவை. அதற்காக பாடு படுவது ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும்.

எமது நேசத்திற்குறிய தாய் நாடு இதுபோன்ற இக்கட்டான ஒரு நிலையை இதற்கு முன் ஒரு போதும் அனுபவித்தது இல்லை.

இந்த நேரத்தில் எமக்கு தெய்வீக இறை தலையீடு தேவையாக உள்ளது. எனவே நாம் இருக்கும் ஆபத்தான சூழ்நிலையில் இருந்து நம்மை விடுவிக்க இந்த ஈஸ்டர் காலத்தில் உயிர்த்த இயேசுவிடம் உருக்கமாக மன்றாடுவோம்.

இவ் ஆண்டு ஈஸ்டர் பண்டிகை கத்தோலிக்க மற்றும் பிற கிறிஸ்தவ தேவாலயங்களில் வழிபடச் சென்றோர் மற்றும் வேறு இடங்களிலும் நடாத்தப்பட்ட மிலேச்சத்தனமான குண்டு தாக்குதலின் ஐந்து ஆண்டுகள் நிறைவை குறிக்கின்றது.

2019 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் 273 பேர் கொல்லப்பட்டதோடு, குறைந்தது 500 பேர் வரை காயமடைந்தனர்.

இந்த தற்கொலை தாக்குதல்கள் நடந்து சரியாக 5 வருடங்கள் கடந்துள்ள போதும் இந்த தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்களை விசாரிக்க பல்வேறு குழுக்கள் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட போதிலும் நாங்கள் இதுவரை உண்மையை அறிய முடியவில்லை.

ஈஸ்டர் அனுபவம் எதிர் காலம் மட்டில் உள்ள நிச்சயமற்ற நிலையில் நம்பிக்கையளிக்கிறது. தாய் நாட்டின் இந்த இருள் சூழ் நேரத்தில் உயிர்த்த இயேசுவின் ஒளியால் நாம் அறிவொளி பெறுவோம்.

இறைவன் நம்மை ஆட்கொள்ள மன்றாடுவோம். உங்கள் அனைவருக்கும் உயிர்த்த இயேசுவின் மகிழ்சியையும், அமைதியையும் ஆசித்து நிற்கிறேன். என மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் 25 அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை திறந்துவைக்கப்பெற்றது

## – கனகராாசா சரவணன் –

மட்டக்களப்பு இராமகிருஷனமிஷனின் நூற்றாண்டின் தொடக்க விழாவினை சிறப்பிக்குமுகமாக கல்லடிப்பாலத்தடி பகுதியில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட 25.05 அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை 31-03-2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இராமகிருஷனமிஷன் இலங்கைக்



கிளையின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹராஜ் சம்பிராய பூர்வமாக திந்து வைத்தார்.

மாவட்ட பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ராமகிருஷன் இலங்கைக் கிளையின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹராஜ், அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான கே. கருணாகரம், இரா. சாணக்கியன், முன்னால் மாவட்ட அரசாங்க அதிபர்களான கே. கருணாகரன், கலாமதி பத்மராஜா, கே. விமலநாதன் உள்ளிட்ட மட்டக்களப்பு இராமகிருஷ்னமிஷன் உதவி முகாமையாளர் சுவாமி சுரார்ச்சிதானந்த ஜீ மஹராஜ், மற்றும் கல்வி திணைக்கள அதிகாரிகள், வர்தகசங்கத்தினர், மாணவர்கள், பெற்றோர்கள், மாவட்டத்தில் உள்ள திணைக்கள உயர் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதனை தொடாந்து சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை



சம்பிராய பூர்வமாக திரைநீக்கம் செய்து திறந்துவைக்கப்பட்டது.

# ‘‘எமது கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலியேவ்றா கனடாவின் அனைத்து மாகாணங்களையும் இணைக்கும் வல்லமை கொண்டவராக விளங்குகின்றார்’’

## மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளராக வருவதற்காக மக்கள் ஆதரவை நாடும் திரு தீபக் தெல்ரெஜா கூறுகின்றார்.

’எமது கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலியேவ்றா கனடாவின் அனைத்து மாகாணங்களையும் இணைக்கும் வல்லமை கொண்டவராக விளங்குகின்றார்”

இவ்வாறு மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளராக வருவதற்காக மக்கள் ஆதரவை நாடும் திரு தீபக் தெல்ரெஜா கூறுகின்றார். தற்போது தனக்கான ஆதரவை மக்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான திட்டத்தின்படி பணியாற்றிக்கொண்டிருக்கும் அவரிடம் நாம் முன்வைத்த கேள்விகளும் பதிகளும் கீழே காணப்படுகின்றன.



கேள்வி:
மார்க்கம் தோர்ன்ஹில் தொகுதி வேட்பாளராக கொன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் போட்டியிடும் வகையில் முயன்று கொண்டிருக்கும் தங்களுக்கு எப்போது, எவ்வளவு அரசியல் ஆர்வம் ஏற்பட்டது?

பதில்:
மார்க்கம் தோண்ஹில் தொகுதி ஒரு தனித்துவமான தொகுதி. இந்தத் தொகுதியில் வாழ்பவர்களுடைய தேவைகள் மிக அவசரமாக பூர்த்தி செய்யப்பட வேண்டியவை. அவைகளை நான் முதன்மையாகக் கவனிப்பேன்.

மார்க்கம் தோண்ஹில் தொகுதி மக்களுக்கு,சேவை புரிய. ஒரு பரந்த பார்வையுடன் எல்லா சமூகங்களுக்கும் நீதியான முறையில் செயல்படுவேன். நான் இத்தொகுதியில் உள்ள எல்லா சமூகங்களுடனும் நெருக்கமாக இணைந்து வேலை செய்கின்றேன். இதன் மூலம் மேற்படி சமூகங்களின் ஆதரவையும் பெற்றிருக்கின்றேன்.

கேள்வி:
கொன்சர்வேர்ட்டிவ் கட்சி மூலம்தான் கனடியர்களது அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு காணலாம் என்று நினைக்கின்றீர்களா? அப்படியானால் எவ்வாறு?
பதில்:

1 , தேவையற்ற வரிகளை அகற்றுவது
2, புதிய வீடுகளைக் கட்டுவது,
3, குற்றச்செயல்களைத் தடுப்பது,
4, வரவு செலவுத் திட்டத்தை சமன்படுத்துவது.
நான்கு தூண்கள் போன்ற முக்கியமான இந்த முன்னெடுப்புகள் தான் கனடிய கொண்சர்வேட்டிவ் கட்சியின் முதன்மையான செயல்பாடாக இருக்கப் போகிறது.மற்றும்,

- எமது கடன்களைக் கட்டுவதற்கு கூடுதலான வரிகள் வசூலிக்க வேண்டும் என்பது தேவையற்ற ஒன்று
- வியாபாரங்களுக்கு வரியை குறைப்பதன் மூலம் வேலை வாய்ப்புகள் கூட்டப்படும். அத்துடன் மேலதிக வருமானமும் ஈட்டப்படும்.
- குற்றம் புரிவோர் சிறையில் வைக்கப்பட வேண்டும். அவர்கள் இலகுவில் பிணையில் விடுபடக்கூடாது. எமது அணுகுமுறை மூலம் பணவீக்கத்தை குறைப்போம். கூடுதலான வீடுகள் மாநகரங்களுடன் இணைந்து கட்டப்படும்.
- அத்துடன் கரியமில வாயுவை வளிமண்டலத்திற்கு அனுப்பி, அதனால் ஏற்படும் சூழற் பாதிப்புக்களை குறைப்பதற்கு அணு கதிரியக்க தொழில்நுட்பத்தையும், சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் தொழில்நுட்பத்தையும் ஆதரிப்போம்.

கேள்வி:
தமிழ் மக்களது தாயக அரசியல் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். இங்குள்ள தமிழ் பேசும் அன்பர்களுக்காக தாங்கள் என்ன செய்தியை அவர்களுக்குக் கூற விரும்புகிறீர்கள்?

பதில்:
தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். எமது கட்சியின் தலைவர் பியர் பொலியேவ்ற , ஈழத் தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலை என்றும் இது சர்வதேச நீதிமன்றத்தில் (ஐஊஜ) விசாரிக்கப்பட வேண்டும் என்றும் தெளிவாக கூறியிருக்கின்றார்.

ஒரு நாட்டில் வசிக்கும் மக்களுக்கு பேச்சு சுதந்திரம் இல்லாவிடில் அங்கு தனி மனித சுதந்திரமும் இல்லாது போய் விடும். ஆறாம் சட்ட திருத்தம் (ஆவணி 8,1983) தமிழ் மக்கள் தமது பெரு விருப்பமான சுதந்திர நாட்டை பற்றிப் பேசக்கூட முடியாத நிலைக்கு ஈழத் தமிழ் மக்களைத் தள்ளி உள்ளது. ஆறாம் சட்ட திருத்தமும் ( 6வா யஅநனெஅநவெ வழ வாந உழளெவவைரவழைெ ) பயங்கரவாத தடைச் சட்டமும் ஈழத் தமிழர்களை ஒரு பயம் கொள்ளும் நிலையில் கடந்த 40 வருடங்களாக வைத்துள்ளது.என்றால் அது பொய்யான கருத்தாக மாட்டாது.

கேள்வி:
கனடாவின் அரச நிதியானது பெருமளவு பல்வேறு வழிகளில் வீணடிக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் எழுதுகின்றனவே அது பற்றி...

பதில்:
தனது ஒவ்வொரு ஊழல் செயலையும் தற்போதைய லிபறல் அரசாங்கம் மூடி மறைத்து வருகிறது.

SNE - Lavalin ஊழல்
WE chanty ஊழல்
Arrivecan ( Arrivescam ) ஊழல்

இப்படியான ஊழல்கள் லிபரல் அரசாங்கத்தின் பெரும் ஊழல்களுக்கு சில உதாரணங்களாக கூறலாம்.

மக்களின் பெரும் நிதிகள் சில தனிப்பட்டவர்கள் செல்வந்தர் ஆகும் செயல்பாடுகளை, லிபரல் அரசாங்கத்தின் திறமையற்ற செயற்பாடுகள் காட்டி நிற்கின்றன.

எமது கன்சர்வேட்டிவ் கட்சியின் நிலைப்பாடு :என்னவென்றால் நாம் புதிதாக செலவு செய்யும் ஒவ்வொரு டொலருக்கும் ஒரு டொலர் வேற எங்காவது சேமிக்கப்பட வேண்டும்.. இந்த விடயத்தில் எமது தலைவர் பிரதமராகப் பதவியேற்கவுள்ள நாளில் இருந்தே திட்டமிட்டுச் செய்வார் என்பது எமது நம்பிக்கை

கேள்வி:
தங்களது கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் அவர்களின் எதிர்க்கட்சித் தலைவராக பாராளுமன்றத்தில் பணியாற்றிய காலம் பற்றி தங்களது கருத்து என்ன?

பதில்:
எமது கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலியேவ்றா பாராளுமன்றத்தில எதிர்கட்சித் தவைராகப் பொறுப்பேற்று இன்றுவரை ஒன்றரை வருடங்கள் ஆகின்றன. இந்த் காலப்பகுதியில் நான் அவரிடத்தில் பல சிறப்பான குணாதிசியங்களைக் கண்டிருக்கின்றேன்.

எமது கட்சிக்குள் ஒத்த சீந்தனை இல்லாத அங்கத்தவர்களை புரிந்துணர்வோடு இணைக்க கூடிய சிறந்த ஆற்றல் கொண்டவர். அதனை விட கனடாவின் எல்லா மாகாணங்களையும் இணைக்கும் வல்லமை கொண்டவராகவும் விளங்குகின்றார்.

எமது கட்சித் தலைவருடைய தூர நோக்கு சிந்தனையும். தெளிவான திட்டமிடலும். அவர் கனடிய பிரதமராக பொறுப்பேற்கும் போது மக்களின் வாழ்க்கை தரத்தை மீண்டும் உயர்நிலைக்கு கொண்டு வருவார் என்பதை நான் உறுதியுடன் கூறுவேன்.

இவ்வாறு திரு தீபக் தனது கேள்வி பதில் அடிப்படையில் தெரிவித்துள்ளார்.



# ராஜபக்சக்களின் விருப்பத்தின்படி இலங்கையில் முதலில் பொதுத் தேர்தல் நடத்தப்படுமா?

பசில் ராஜபக்ச ஒரு சிறந்த டீலர் என்பது எல்லாருக்கும் தெரியும். அவர் அமெரிக்காவிலிருந்து வந்ததும் ஜனாதிபதித் தேர்தலுக்கான டீல்கள் ஆரம்பமாகும் என்பதும் எல்லோரும் எதிர்பார்த்ததே. அவர் வந்ததும் ஜனாதிபதியுடன் உரையாடினார். பேச்சுவார்த்தையின் முடிவுகள் வெளியில் வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பதிலாக பொதுத் தேர்தலை முதலில் வைக்கலாம் என்ற ஒரு ஆலோசனையை பசில் வெளிப்படுத்தினார். பின்னர் மஹிந்த ராஜபக்சவும் அதை ஆதரித்தார்.

அதாவது ராஜபக்சக்கள் பொதுத் தேர்தலை முதலில் வைக்க விரும்புகிறார்கள். ஏனென்றால் ஒரு ஜனாதிபதி தேர்தலின் பின் பொதுத் தேர்தல் வைக்கப்படும் போது ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் கட்சி அல்லது கட்சிகளின் கூட்டானது, பொதுத் தேர்தலில் வெல்வதற்கான வாய்ப்புகளை அதிகமாக கொண்டிருக்கும். ஏனெனில் ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த வெற்றி வாக்காளர்களை பொறுத்தவரை ஒரு முன் முடிவாக அல்லது முற்கற்பிதமாக மாறும். இதனால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற தரப்பு அடுத்தடுத்த தேர்தல்களிலும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். எனவே ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வாக்காளர்களுக்கு முற்கற்பிதமாக அல்லது முன் முடிவுகளாக அமையாத விதத்தில் முதலில் பொதுத் தேர்தலை வைக்கலாம் என்ற ஆலோசனையை ராஜபக்சக்கள் இப்பொழுது முன்வைக்கின்றார்கள். ஆனால் அவர்களுடைய காலத்தில் முதலில் ஜனாதிபதி தேர்தல்கள்தான் நடந்தன என்பது வேறு கதை.

அவர்கள் ஏன் முதலில் பொதுத்தேர்தலில் வைக்க வேண்டும் என்பதற்கு கூறும் காரணம் புத்திசாலித்தனமாக தெரியலாம். ஆனால் அவர்கள் உண்மையான காரணத்தை மறைப்பதற்குத்தான் அவ்வாறு புத்திசாலித்தனமான ஒரு காரணத்தை கூறுகிறார்கள் என்பதே உண்மை நிலையாகும்.

ஒரு பொதுத் தேர்தலை வைத்தால் அதில் தாமரை மொட்டுக் கட்சிக்கு அதாவது ராஜபக்சங்களுக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்காமல் போகலாம். ஆனால் நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்கவின் யுஎன்பியை விடவும் கூடுதலான வாக்குகள் தமக்குக் கிடைக்கலாம் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதனால் தங்களுக்கு பேர பலம் அதிகமாக இருக்கும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதாவது ராஜபக்சக்கள் தங்களுடைய பேர பலத்தை உயர்த்திக் கொள்ள விரும்புகிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் முதலில் நடந்தால்,ரணில் விக்கிரமசிங்க அதில் வெற்றி பெறுவாராக இருந்தால், அது அவருடைய பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு கிடைத்த வெற்றியாகவும் கருதப்படும். அது அவருடைய பேர பலத்தை அதிகப்படுத்தும். அந்நிலையில் பொது தேர்தலை வைக்கும் பொழுது தாமரை மொட்டுக் கட்சி அதாவது ராஜபக்சக்கள் ரணில் விக்கிரமசிங்கவோடு பேரம் பேசுவதில் வரையறைகள் தோன்றலாம். எனவே பொதுத் தேர்தலை முதலில் வைத்து அதில் தங்களுடைய பேர பலத்தை நிரூபிப்பதற்கு ராஜபக்சக்கள் விரும்பக்கூடும்.

அது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரியும். அவரைப் பொறுத்தவரை இது கடைசி ஓவர். அவருக்கு வயதாகிவிட்டது. தன்னுடைய கடைசி ஓவரிலாவது தன் சொந்தப் பலத்தோடு அல்லது அதிகரித்த பேர பலத்தோடு ஆட்சிக்கு வர அவர் விரும்பக் கூடும். எனவே அவர் ராஜபக்சக்களின் கோரிக்கையை பரிசீலிக்கும் வாய்ப்புகள் குறைவாகவே தெரிகின்றன.

பசில் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் தெரிவித்த கருத்துக்களில் முக்கியமானது பொதுத் தேர்தலை முதலில் வைக்க வேண்டும் என்பது. மற்றது தமது சகோதரர் கோட்டாபயவின் புத்தகத்தை தான் இதுவரை வாசிக்கவில்லை என்றது. கோட்டாபயவின் எல்லாக் கருத்துகளோடும் ஏனைய ராஜபக்சக்கள் முழுமையாக உடன்படவில்லை என்பது.

பசில் புத்தகத்தை வாசித்தாரோ வாசிக்கவில்லையோ, அந்தப் புத்தகத்தில் கூறப்பட்ட விடயங்களில் தமக்கு ஆர்வம் இல்லை என்பதனை அவர் மறைமுகமாகக் கூறுகிறார்.தமது சகோதரர் கோட்டாபய ராஜபக்சவின் தவறுகளுக்கு அவர்கள் பொறுப்பேற்கத் தயாரில்லை என்பதையும் மறைமுகமாக வெளிப்படுத்துகின்றார். சகோதரர்களுக்கு இடையில் இருக்கக்கூடிய முரண்பாட்டை வெளிப்படையாகப் பேச வேண்டிய தேவை என்ன? அதற்கு ஒரு அரசியல் பெறுமதி இருக்கும் காரணத்தால்தான் அவர் அவ்வாறு கூறுகிறார். கோட்டாபயவின் ஆட்சிக் கொள்கையை ஏனைய சகோதரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனை அவர் மறைமுகமாகக் கூறுகிறார்.

இவ்வாறு நாடு திரும்பிய கையோடு பஸில் தெரிவித்த கருத்துக்களின் ஊடாக அவர்கள்,அதாவது ராஜபக்சக்கள் மீண்டும் அரசியல் பேர விளையாட்டில் இறங்கப் போகிறார்கள் என்று தெரிகிறது.



அதாவது, தென்னிலங்கையில் மும்முனைப் போட்டி தீவிரமடையும் என்று பொருள். இது தமிழ் மக்களுக்கு ஒரு விதத்தில் சாதகமானது. ஏனெனில் சிங்கள வாக்குகள் மூன்றாகப் பிரியும் பொழுது எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் திட்டவட்டமாக 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெறுவது சவால்கள் மிகுந்ததாக மாறலாம்.அப்பொழுது தமிழ் வாக்குகள் தீர்மானகரமான வாக்குகளாக மாற முடியும்.அதாவது தமிழ் மக்களின் பேர பலம் அதிகரிக்கும்.

அப்படி ஒரு எதிர்பார்ப்போடு தான் ஈ.பி.ஆர்.எல்எப் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ் பொது வேட்பாளர் என்ற தெரிவை கடந்த சில மாதங்களாக அழுத்தமாக வலியுறுத்தி வருகிறார்.

தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்தை கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது முன்வைத்தது தமிழ் மக்கள் பேரவையால் நியமிக்கப்பட்ட சுயாதீனக் குழுவாகும். இம்முறை அதனை முதலில் கதைத்தது சுரேஷ் பிரேமச்சந்திரன். அதன் பின் அவர் அங்கம் வகிக்கும் குத்துவிளக்குக் கூட்டணி அதனை ஒரு தீர்மானமாக வெளிப்படுத்தியது. ஆனால் குத்து விளக்கு கூட்டணிக்குள் உள்ள பெரும்பாலான கட்சிகள் அந்த விவகாரத்தில் தமிழரசுக் கட்சி தங்களோடு இணையாவிட்டால் அது ஒரு பிரயோசனமான நகர்வாக அமையாது என்று கருதுவதாகத் தெரிகிறது.தமிழரசுக் கட்சி அகோரிக்கையை ஆதரிக்காவிட்டால் பொது வேட்பாளர் என்று தெரிவு வெற்றி பெறாது என்றும் அவர்கள் நம்புவதாகத் தெரிகிறது.

இது ஒரு தன்னம்பிக்கை குறைவான விடயம். தங்கள் சொந்தக் கட்சியில், தங்கள் சொந்த உழைப்பில் அவர்களுக்கு நம்பிக்கை குறைவு என்று பொருள். தமிழரசுக் கட்சியும் இணைந்தால்தான் வெற்றி பெறலாம் என்று நம்புவது ஒருவித தாழ்வுச் சிக்கல்தான். தாங்கள் முன்வைக்கும் ஒரு கோரிக்கைக்காக உழைத்து, அதற்காக அர்ப்பணிப்புகளைச் செய்து, அதில் வெற்றி பெற வேண்டும் என்ற வைராக்கியம் குத்துவிளக்கு கூட்டணிக்குள் எத்தனை கட்சிகளிடம் உண்டு?

இதனிடையே ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஒரு கருத்தாக உருவாக்கும் நோக்கத்தோடு, டான் டிவி நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் ஒரு சிவில் அமைப்பு,ஒரு கருத்தரங்கை அண்மையில் ஒழுங்குபடுத்தியது. "மக்கள் மனு" என்று பெயரிடப்பட்ட அக்கருத்தரங்கில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர ஏனைய எல்லா கட்சிகளும் கலந்து கொண்டன. சுமந்திரன் அணி பங்கு பற்றவில்லை. சிறீதரன் பங்குபற்றினார். அதில் பேசிய பெரும்பாலான கட்சித் தலைவர் பொது வேட்பாளருக்கு ஆதரவாகக் கருத்து கூறினார்கள்.

அதன்பின் அந்த சிவில் அமைப்பு தென்னிலங்கையில் உள்ள அரசியல் கட்சி தலைவர்களை சந்தித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. டான் டிவியின் தமிழ்ப் பொது வேட்பாளர் எந்த நோக்கத்தின் அடிப்படையில் முன்வைக்கப்படுகிறார் என்பது இன்னமும் தெளிவாகவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவு முதலாவதாக ஜனாதிபதி தேர்தலை ஒரு பொது வாக்கெடுப்பாக மாற்றும் நோக்கிலானது. அதன் மூலம் தமிழ் மக்களின் உச்சபட்ச கோரிக்கைகளை முன்வைத்து அதற்கு தமிழ் மக்களின் அகப்பிந்திய ஆணையைப் பெறுவது. அதன் பின்னர் தான் சிங்கள வேட்பாளர்களோடு பேரம் பேசுவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது.

எனவே தமிழ் பொது வேட்பாளர் என்று தெரிவு ஆகப்பிந்திய ஒரு தமிழ் ஆணையைப் பெறுவதற்கான உள்நோக்கமுடையது. அதில் தமிழ் மக்கள் முன் வைக்கப் போகும் கோரிக்கைகள் உச்சமானவைகளாக இருக்க வேண்டும். நீதிக்கான கோரிக்கையும் தமிழ் மக்களின் பொது விருப்பினை வெளிப்படுத்தும் பொது வாக்கெடுப்புக்கான கோரிக்கையும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும்.தமிழ் பொது வேட்பாளர் தமிழ் கோரிக்கைகளின் குறியீடாக நிற்பார். தமிழ் ஐக்கியத்தின் குறியீடாக நிற்பார். அவர் தமிழ் மக்களின் அகப்பிந்திய மக்கள் ஆணையை உலகிற்கு வெளிப்படுத்துவார்.

இம்முயற்சியில் தோல்வியுற்றால் அது தமிழ் மக்களின் கோரிக்கைகளை பலவீனப்படுத்திவிடும் என்று ஒரு பகுதி விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். குத்துவிளக்குக் கூட்டணிக்குள்ளும் அந்த அச்சம் உண்டு.அதனால் தான் தமிழரசுக் கட்சி அதில் இணைய வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தமிழரசுக் கட்சியோ அதன் உள் வீட்டுப் பிரச்சினைகளால் நீதிமன்றத்தில் போய் நிற்கின்றது. எனவே தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலைக் குறித்து ஒரு உறுதியான முடிவை எடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இந்நிலையில், குத்துவிளக்குக் கூட்டணியும் டான் டிவி-யின் சிவில் சமூகமும் இணைந்து ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நோக்கி முன்னெடுக்கும் கருத்துருவாக்கம் தமிழ் மக்களின் அகப்பிந்திய ஆணையை வெளிக்கொ-ண்டுவரும் வெற்றிகரமான ஒரு செயற்பாடாக அமையு-மா இல்லையா என்பது விரைவில் தெரியவரும்.

நிலாந்தன்

My very Best Wishes
to the Premier Issue of
'Thesam', Monthly Tamil Journal

றொறன்ரோ பெரும்பாகத்திலிருந்து வெளிவரும்
"தேசம்" மாத இதழில்
முதலாவது வெளியீட்டுக்கு
என் வாழ்த்துக்கள்.



ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org



VIBRANT
HOSPITALITY
GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING
HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OVER
25 Years
IN THE HOSPITALITY
INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
LOCAL: 905 769 1509
TOLL FREE: 1 888 674 7770
VIBRANTHOSPITALITYGROUP.COM


ARTHIE
MONEY TRANSFER
பணம் அனுப்புவதற்கான
கட்டணம் $5 மட்டுமே
Markham & Steeles Orange Building
108- 3331 Markham Road,
Scarborough, ON M1M 2Z4.
416-754-7474
TRANSACTION COMPLETE
-$100
NEXT


Door delivery within 25 days from dispatch
Now Open 7 Days a Week
MOSLEY
IMPORT & EXPORT
108-3331 Markham Rd, Scarborough
416 754 7474
Canada
to
SriLanka
By Ship 50 KG - $80
By Air 23 KG - $260
Markham & Steeles Orange Building

# கனடியத் தமிழர்கள் நன்றி உணர்வுடன் அஞ்சலி செலுத்தி 'பிரியாவிடை' வழங்கப்பட்ட 18வது பிரதமர் பிரையன் மல்ரோனி அவர்கள்

அண்மையில் காலமான கனடாவின் சிறந்த பிரதமர்களாக பணியாற்றிய சிலருள் ஒருவராக மதிக்கப்பெற்ற பிரையன் மல்ரோணி அவர்களின் இறுதிக்கிரியைகள் 23-03-2024 அன்று கனடியத் தலைநகராக ஒட்டாவா மாநகரில் பாராளுமன்றத்திற்கு அருகில் நடைபெற்றது. அவரது இறுதிக்கிரியைகளில் கனடியத் தமிழர்கள் பெருமளவில் பங்குபற்றாவிட்டாலும் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் அன்னாருக்கு நன்றியுடையவர்களாக இன்றும் இருப்பதற்கு காரணங்கள் உண்டு.



1986ம் ஆண்டு கனடாவின் நியுபவுண்லேன்ட் மாகாணத்தின் கரையில் கப்பலொன்றில் அனுமதியின்றி சட்டவிரோதமாக வந்திறங்கிய 155 இலங்கைத் தமிழ் அகதிகளை கனடிய அரசாங்கம் ஏற்றுக்கொள்வதா அன்றி திருப்பி அனுப்புவதாக என்ற விவாதங்களை தேசிய ஊடகங்கள் நடத்திக் கொண்டிருந்தன. அதே வேளை கனடிய பாராளுமன்றத்திலும் இந்த விடயம் தொடர்பான விவாதங்கள் இடம்பெற்ற வண்ணம் இருந்தன. ஒரு வாரம் அளவிற்கு இந்தப் பிரச்சனை நீடித்தது.

ஆனால் அப்போது கனடாவின் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி ஆளும் கட்சியாக இருக்க அதன் பிரதமராகப் பதவி வகித்த மேன்மைதங்கிய பிரைன் மல்ரோணி அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை உலகத் தமிழர்களுக்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லுவது போன்று அமைந்தது.



அவர் தனது உரையில் 'இந்த 155 அகதிக் கோரிக்கையாளர்களும் கனடாவின் முகத்தை ஒன்றும் மாற்ற மாட்டார்கள். கனடாவில் தற்போது வாழ்ந்து வரும் பெரும்பாலானவர்கள் கனடாவிற்கு அகதிகளாகத் தான் வந்தவர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எனவே தற்போது எமது தேசத்தின் கரையை நாடி வந்திருக்கும் அவர்கள் அனைவரையும் நாம் ஏற்கொண்டு அவர்கள் மீதான விசாரணைகளை நடத்துவோம். அவர்களது கோரிக்கைகள் நியாயமாக இருந்தால் எமது நாட்டின் பிரஜைகளாக நாம் ஏற்றுக்கொள்வோம்' என்றார்.

அவரது உரையில் அடங்கிய விடயங்கள் அனைத்தும் பின்னர் கனடிய அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு 155 அகதிக்கோரிக்கையாளர்களும் தற்போது கனடாவின் குடியுரிமைபெற்றவர்களாக சிறந்த வாழ்க்கையை இங்கு அமைத்துக்கொண்டார்கள்.

இவ்வாறாக. மறைந்த முன்னாள் கனடியப் பிரதமர் பிரைன் மல்ரோணி அவர்களுக்கு கனடியத் தமிழர்கள் மாத்திரமல்ல உலகத் தமிழர்கள் அனைவரும் நன்றி செலுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அவர் மறைந்தாலும் எமது மக்களின் மனங்களிலிருந்து 'அசாதாரண அரசராக' விளங்கிய பிரைன் மல்ரோணி அவர்கள் எளிதில் மறைந்து விட மாட்டார்.

கனடாவின் மிக முக்கியமான பிரதமர்களில் ஒருவரான பிரையன் மமல்ரோனி, 84 வயதில் இறந்தார். கனடாவின் 18வது பிரதமராக, தேசிய மற்றும் உலக விவகாரங்களில் கொந்தளிப்பான காலகட்டத்தில் கனடிய தேசத்தை வழிநடத்திய பிரையன் மல்ரோனி அவர்கள், 29 பிப்ரவரி 2024 வியாழன் அன்று, புளோரிடாவின் பாம் பீச்சில், குடும்பத்தினராடுன் இருந்த வேளையில், அமைதியாக சாவைத் தழுவினார்.

முல்ரோனி மார்ச் 20, 1939 இல் தொழிலாளர்களாக இருந்த ஐரிஷ் கனேடிய பெற்றோருக்கு 1939 இல் வனம் சார்ந்த நகரமான பை-கோமாவில் பிறந்தார். அவரது தந்தை கியூபெக்கின் வடகிழக்கில் உள்ள இந்த கடினமான புறக்காவல் நிலையத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலையில் மின்சார வினைஞராக பணியாற்றினார். மல்ரோனி அவர்கள் பிரஞ்சு மற்றும் ஆங்கிலம் பேசுபவர்களிடையே தனிமைப்படுத்தப்பட்ட சமூகத்தில் பிளவுபட்ட இரு கலாச்சார உலகக் கண்ணோட்டத்துடன் வளர்ந்தார் - இந்த வளர்ப்பு பின்னர் அரசியல் ரீதியாக பயனுள்ளதாக இருந்தது.

மறைந்த மல்ரோனி அவர்கள் தனது அரசாங்கத்தில் செனட்டரும் அமைச்சருமான லோவெல் முர்ரே உடனான நட்பின் மூலம் பழமைவாத அரசியலில் ஆர்வம் காட்டினார். முர்ரே தனது கவர்ச்சியான வகுப்புத் தோழரை ஆண்டிகோனிஷ், என். எஸ். ஸில் உள்ள செயின்ட் பிரான்சிஸ் சேவியர் பல்கலைக்கழகத்தில் உள்ள முற்போக்கு பழமைவாத வளாகக் கழகத்தில் இணைந்து கொள்ளும் படி உற்சாகப்படுத்தினார்.

மல்ரோனி அவர்கள் ஒரு திறமையான பொது பேச்சாளர் மற்றும் திறமையான அரசியல்வாதி. பிரதம மந்திரியாக, அவர் அமெரிக்காவுடன் ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார் மற்றும் கனடாவின் உச்ச சட்டத்தில் கியூபெக்கின் கையொப்பத்தைப் பெறுவதற்கு அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுத்தார் - அது தோல்வியடைந்தது. பலூனிங் பட்ஜெட் பற்றாக்குறைக்கு எதிராக நிதி திரட்ட தேசிய விற்பனை வரியை அறிமுகப்படுத்தினார், சில அரச நிறுவனங்களை தனியார்மயமாக்கினார் மற்றும் எந்த கனேடிய பிரதமரும் நினைத்துப்பார்க்க முடியாத பதவிக்காலத்தில் தென்னாப்பிரிக்காவில் இன நிறவெறிக்கு எதிராக வலுவாக நின்றார்.

அவரது ஐரிஷ் கனேடிய பின்னணியுடன் மல்ரோணி அவர்கள் பின்னர் கியூபெக் நகரத்தில் உள்ள சட்டப் பள்ளிகளுக்குச் சென்றார். அவரது இருமொழித் திறன்கள் மற்றும் பிற திறமைகள் பின்னர் அவரது அரசியல் வர்த்தக முத்திரையாக மாறியது, அவர் ஒரு கியூபெக் தொழிலாளர் வழக்கறிஞராக முக்கியத்துவம் பெற்றார், சமரசம் செய்ய முடியாத சர்ச்சைகளைத் தீர்த்தார். அவர் தனது சொந்த மாகாணமான கியூபெக்கில் ஊழலுக்கு எதிரான போராட்ட வீரராகப் பெயர் பெற்றார். ஜேம்ஸ் பே நீர்மின்சார அணை கட்டுமான தளத்தில் வன்முறை வெடித்த பிறகு, முல்ரோனி சட்டவிரோதமான செயற்பாடுகளை விசாரிக்கும் முக்கியஸ்த்தராக நியமிக்கப்பட்டார்.

1976 இல் தோல்வியுற்ற முற்போக்கு கன்சர்வேடிவ் தலைமை தனது முயற்சியைத் தொடர்ந்தது, 1983 தலைமை மாநாட்டில் அப்போதைய தலைவர் ஜோ கிளார்க்கிற்கு எதிர்ப்பை ஏற்பாடு செய்த பின்னர் முல்ரோனி கட்சியின் ஆட்சியைப் பிடித்தார். முல்ரோனி - - கியூபெக்கிலிருந்து பிரதிநிதிகள் மத்தியில் அவருக்கு இருந்த ஆதரவின் பலத்தின் அடிப்படையில் முன்னாள் பிரதம மந்திரியை தலைமைப் பதவியில் இருந்து நீக்கினார். தாராளவாதிகள் வாக்கெடுப்பில் தடுமாறிய நிலையில், மல்ரோனி 1984 பிரச்சாரத்தில் வெற்றிக்கு அழைத்துச் சென்றார் - இது கனடிய வரலாற்றில் மிகப்பெரிய தேர்தலாக பார்க்கப்பட்டது.



மல்ரோனி அயல்நாடான அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான அவரது திட்டத்தை வாக்காளர்கள் ஆதரித்த பின்னர் 1988 இல் மல்ரோனி மீண்டும் வெற்றி பெற்றார் - இது மல்ரோனி சகாப்தத்தின் மிக முக்கியமான கொள்கையாகும். மல்ரோனி மற்றொரு பெரும்பான்மை அரசாங்கத்துடன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(தொடர்ச்சி 13 பக்கம்)

# கனடியத் தமிழர்கள் நன்றி உணர்வுடன் அஞ்சலி செலுத்தி 'பிரியாவிடை' வழங்கப்பட்ட 18வது பிரதமர் பிரையன் மல்ரோனி அவர்கள்

(12 பக்கம் தொடர்ச்சி)

அரசியலமைப்பு குழப்பங்களுக்கு மத்தியில் மற்றும் ஆழ்ந்த செல்வாக்கற்ற சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, மல்ரோனியின் புகழ் வியத்தகு அளவில் சரிந்தது. அவர் தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முடிவில் சாதனை - குறைந்த அங்கீகார மதிப்பீடுகளை வெளியிட்டார். அமெரிக்கா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, தற்போதுள்ள உற்பத்தியாளர்களின் விற்பனை வரி (எம்எஸ்டி) முறையை சீர்திருத்த மல்ரோனி முயன்றார், இது கனடாவின் ஏற்றுமதியாளர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தியது. அந்த 13.5 சதவீத வரியானது நுகர்வோருக்குக் கண்ணுக்குத் தெரியாததாக இருந்தது, அதே நேரத்தில் அதை மாற்றியமைக்கும் நுகர்வு அடிப்படையிலான ஜிஎஸ்டி - கனடாவில் வாங்கப்படும் அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதும் 7 சதவீத வரி - நேரடியாக பணப் பதிவேட்டில் செலுத்தப்பட வேண்டும். ராணியின் ஒப்புதலுடன், லிபரல் கட்சி ஆதிக்கம் செலுத்தும் மேலவையின் மூலம் செல்வாக்கற்ற மசோதாவைப் மீளப‘பெற முல்ரோனி செனட் சபையின் சம்மதத்தை வேண்டி நின்று அதில் தோல்வி அடைந்தார். பின்னர் பிரைன் மல்ரோனி 1993 இல் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகினார்.

பிரதமர் பிரையன் மல்ரோனி அவர்கள். தனது இருண்ட அரசியல் வாய்ப்புகள் மற்றும் தொடர்ச்சியான மந்தநிலைக்கு தலைவணங்கி, ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் பதவியில் இருந்து பதவி விலகுவதாக அறிவித்தார். பிரதமர் பதவி விலகுவதாக பகிரங்கமாக அறிவித்தார். பிப். 24, 1993 அன்று சிபிசி தொலைக்காட்சி செய்திமீலு இந்த பதவி விலகல் ஒளிபரப்பப்பட்டது. அவர் தனது ராஜினாமா உரையில், ‘எங்கள் தீர்வுகளை ஒருவர் ஏற்றுக்கொண்டாலும் இல்லாவிட்டாலும், எங்களுடைய மிகவும் சர்ச்சைக்குரிய விஷயங்களில் இருந்து விலகி, எங்கள் பொறுப்புகளில் இருந்து தப்பிக்கத் தேர்ந்தெடுத்ததாக யாரும் எங்களைக் குற்றம் சாட்ட மாட்டார்கள். நான் எனது நாட்டிற்கு சிறந்ததைச் செய்துள்ளேன்’. 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் மல்ரோனி கூட்டாட்சிக் கட்சியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, லிபரல் தலைவர் ஜீன் கிரெட்டியன் - வாக்காளர்களின் விரக்தியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையில் - 'Axe the Tax' என்பதை தனது பிரச்சார மந்திரமாக மாற்றினார். இதனால் அவர்கள் தேர்தலில் எளிதில் வெற்றி பெற்றார். மல்ரோனியின் வாரிசான கிம் காம்ப்பெல், வரியை ரத்து செய்வதாக அவர் அளித்த வாக்குறுதியை ஒருபோதும் பின்பற்றவில்லை, ஏனெனில் அது அரசாங்க வருவாயில் பில்லியன் கணக்கான டாலர்களை ஈட்டியது - கனடாவின் கணிசமான தேசிய கடனை செலுத்த பணம் பயன்படுத்தப்பட்டது.


ஒட்டாவாவில் புதன் கிழமையும், வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மாண்ட்ரீலின் செயின்ட் பேட்ரிக் பசிலிக்காவிலும் மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள். அவரது மகள் கரோலின் மல்ரோனி, ஒன்ராறியோ மாகாண அமைச்சரவை அமைச்சர், கியூபெக்கின் முன்னாள் பிரதமர் ஜீன் சாரெஸ்ட், முன்னாள் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர், ஹாக்கி ஜாம்பவான் வெய்ன் கிரெட்ஸ்கி மற்றும் பிரதமர் ஜஸ்டின் ஆகியோரின் அஞ்சலிகளுடன் சனிக்கிழமை (மார்ச் 23) காலை அரசு இறுதிச் சடங்கு நடைபெற்றது.

பிரையன் முல்ரோனி, முன்னாள் முற்போக்கு தலைவர் மற்றும் கனடாவின் பிரதமர் (1984 - 1993) நம்பமுடியாத கலைக்களஞ்சிய மனதையும் ‘பெரிய விஷயங்களை’ செய்யும் தைரியத்தையும் கொண்ட ஒருவராக நினைவுகூரப்படுகிறார். அவர் இந்த நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் இருந்தார் - கனடாவை முழு மனதுடன் நேசித்தார் - மேலும் பல ஆண்டுகளாக பல வழிகளில் சேவை செய்தார். அவர் ஒரு அசாதாரண அரசியல்வாதியாக இருந்தார், மேலும் அவர் ‘கனேடிய அரசியல-ன் சிங்கங்களில் ஒருவராக’ அவர் விட்டுச் செல்லும் மிகப்பெரிய பாரம்பரியத்திற்காக நினைவுகூரப்படுவார்.

அவரது ஆன்மா நித்திய சாந்தி அடையட்டும்!

# “இலங்கையில் தொடர்ச்சியாக தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள் அச்சத்துடனும் மரண பயத்துடனும் தங்கள் பணிகளை ஆற்றிவருகின்றார்கள்”

## ஜெனிவா மனித உரிமைகள் மன்றில் உரையாற்றிய முன்னாள் பிபிசி செய்தியாளரும் கனடா உதயன் தென்னாசிய செய்தியாளருமான சிவா. பரமேஸ்வரன் தெரிவிப்பு



‘இலங்கைத் தீவில் தொடர்ச்சியாக தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள் அச்சத்துடனும் மரண பயத்துடனும் தங்கள் பணிகளை ஆற்றிவருகின்றார்கள். மேற்படி மரண அச்சுறுத்தல்களுக்கு ‘பெயர் பெற்ற’ நாடாக விளங்கும் இலங்கையில் ஊடகச் சுதந்திரம் என்பது சட்டப் புத்தகத்தில் எழுத்து வடிவில் மட்டுமே உள்ளது. நடைமுறையில் இல்லை. அங்கு சுமார் 80 தமிழ் பேசும் ஊடகவியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல்கள் தொடர்ச்சியாக உள்ளன’.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் வரும். ஜெனிவா மனித உரிமைகள் மன்றில் உரையாற்றிய முன்னாள் பிபிசி செய்தியாளரும் கனடா உதயன் தென்னாசிய செய்தியாளருமான சிவா. பரமேஸ்வரன் தெரிவித்தார். கடந்த 27-03-2024 செவ்வாய்க்கிழமையன்று மாலை அங்கு உரையாற்றிய சிவா பரமேஸ்வரன் தனக்கு வழங்கப்பெற்ற சில நிமிட நேரத்தை நன்கு பயன்படுத்தினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ‘இலங்கையில் நாற்பது வருடங்களுக்கு மேலாக ஊடகச் சுதந்திரம் மறுக்கப்படுவதும். தொடர்ச்சியாக ஊடகவியலாளர் கைது செய்யப்படுவதும் அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாவதும் சிலர் படையினரின் துப்பாக்கிக்கு இரையாவதும் அவ்வப்போது நடைபெறுகின்ற சம்பவங்களாகவே மாறிவிட்டன.

மேலும், 2006ம் ஆண்டு சுப்பிரமணியம் சுகிர்தராஜா என்னும் ஊடகவியலாளர் இராவத்தினரால் கொல்லப்பட்ட பாடசாலை மாணவர்கள் நால்வரின் கொலைபற்றி எழுதியதால் அவர் அரசாங்கப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இடைப்பட்ட காலத்தில் பல ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்கள் உட்பட பலர் அரச புலனாய்வாளர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டும் தாக்கப்பட்டும் உள்ளார்கள். 2021ம் ஆண்டில்கூட பல தாக்குதல்கள் இடம்பெற்றன. விசுவலிங்கம் விஸ்னுசந்திரன் என்னும் ஊடகவியலாளர் யாழ்ப்பாணத்தில் இராவணத்தால் தாக்குதல்களுக்கு உள்ளானார்.

இவ்வாறான இராணுவ மற்றும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் உள்ள இலங்கையில் ஊடகவியலாளர் தங்கள் பணிகளை சுதந்திரமாகச் செய்யும் நிலை உண்டாக எமது ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகள் மன்றம் ஆகியன இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டும்’ இவ்வாறு திரு சிவா பரமேஸ்வரன் தெரிவித்தார்.

# ரஸ்ய–உக்ரேன் யுத்தத்தில் இரண்டு பக்கத்திலும் இணைந்து போரில் மடியும் இலங்கை பெரும்பான்மை இனத்தவர்கள்

## இதுவரை வெளிவராத செய்திகள் கசிந்து வருகின்றன



தற்போது காட்டுமிராண்டித் தனமான தாக்குதலகளை உக்ரேன் தேசத்தின் மீதும் அதன் மக்கள்மீதும் நடத்தி வரும் புட்டினின் ரஸ்யப் படைகள் பல இழப்புக்களைச் சந்தித்திருந்தாலும். 24 பிப்ரவரி 2022 அன்று ஆரம்பிக்கப்பட்ட இந்த கொடிய தாககுதல் இன்னும் தொடர்ந்த கொண்டே உள்ளது. பொதுமக்களும் இராணுவத்தினரும் கொல்லப்பட்டும் காயப்பட்டும் இழப்புக்களைச் சந்தித்து வரும் உக்ரேனின் இராணுவம் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றது.

ஜனவரி 2022 இல் 41 மில்லியன் மக்கள்தொகையில் இருந்து, சுமார் 8 மில்லியன் உக்ரேனியர்கள் இடம்பெயர்ந்தனர் மற்றும் 8.2 மில்லியனுக்கும் அதிகமானோர் ஏப்ரல் 2023 க்குள் நாட்டை விட்டு வெளியேறினர், இது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவின் மிகப்பெரிய அகதிகள் தொடர்பான நெருக்கடியை உருவாக்கியது எனலாம். போரினால் ஏற்பட்ட விரிவான சுற்றுச்சூழல் சேதம், ஒரு பாரிய அழிவுஎன்று பரவலாக விவரிக்கப்பட்டது, உலகளவில் உணவு நெருக்கடிகளுக்கு பங்களித்தது.

உக்ரேனில் நடந்து வரும் மோதல்களுக்கு மத்தியில், அதிகம் அறியப்படாததும் இதுவரையில் வெளிவராததுமான செய்தி ஒன்று தற்போது கசிந்துள்ளது, இது மோதலின் இரு தரப்பிலும் ஆயுதம் ஏந்திய இலங்கை பிரஜைகளின் ஈடுபாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது இந்த செய்தி என்று அறியப்படுகின்றது



வெளிநாட்டு செய்தி அறிக்கையின்படி, உக்ரேனில் ரஸ்யாவுக்காக போரிட்டதில் குறைந்தது இரண்டு இலங்கையர்களும், உக்ரைன் தரப்பில் மூன்று பேரும் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளன நிலையில் 2009ம் ஆண்டு மே மாதம் வன்னி மண்ணில் நடைபெற்ற யுத்தத்தில் உக்ரேன் மற்றும் ரஸ்யா ஆகிய இரண்டு நாடுகளும் விடுதலைப்புலிகளையும் அப்பாவி மக்களையும் அழிப்பதற்காகவும் இலங்கை இராணுவத்திற்கு பல்வேறு வகையான உதவிகளைச் செய்தன.

இவ்வாறிருக்க. டொனெட்ஸ்க் பகுதியில் உள்ள ரஸ்ய பதுங்கு குழியின் மீது உக்ரைன் நடத்திய தாக்குதலில் யுத்த களத்தில் நின்ற இலங்கையர் ஒருவர் காயமடைந்ததாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலில் காயமடைந்த சக இலங்கையர் ஒருவரால் அவர் அந்த இடத்திலிருந்து தூக்கிச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

இரண்டு இலங்கையர்களும் துப்பாக்கிச் சூட்டில் பின்வாங்கிய நிலையில், உக்ரேனிய ஆளில்லா விமானங்களின் மற்றொரு அவர்கள் இருவரும் ரஸ்ய இராணுவத்துடன் பணியாற்றிய ஆக்கிரமிக்கப்பட்ட டொனெட்ஸ்க் பகுதியில் அவர்களின் பதுங்கு குழியைத் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

உயிர் பிழைத்த இலங்கை முன்னாள் இராணுவச் சிப்பாய் உக்ரேனிய ஆளில்லா விமானங்கள் மரண மழை பொழிந்ததால், தனது சக நாட்டவரை விட்டுச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறியிருந்தார்.

ரஸ்யப் படைகளுடன் போரிடும் மற்ற இலங்கையர்களால் இந்த உடல் பின்னர் அடையாளம் காணப்பட்டது - மேலும் இது தெற்காசிய தீவில் இருந்து சமீபத்திய மாதங்களில் ரஸ்யாவுக்காக டொன்டெஸ்க் போர்க்களத்தில் போராடி இறந்த இரண்டாவது இலங்கையர் என்பது அறியப்பட்டது ஆகும்.

கடந்த ஆண்டு ரஸ்யாவின் படையெடுப்பிற்கு எதிராக உக்ரேனுக்காக போராடிய மூன்று இலங்கையர்களின் இறப்புக்களோடு இந்த இரண்டு இறப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது

இதேவேளையில், நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் இப்போது உக்ரேனில் ரஸ்ய இராணுவத்தில் பணியாற்றி வருகின்றனர் என்றும் ரஸ்யாவின் மாதாந்தம் 3,000 டாலர்கள் சம்பளம் மற்றும் ரஸ்ய குடியுரிமைக்கான வாய்ப்பு ஆகியவற்றால் இலங்கையர்கள் போரில் ஈர்க்கப்பட்டவர்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன

மேலும். இன்னும் பலர் - பெரும்பாலும் ஓய்வுபெற்ற இலங்கைப் படையினர் - ரஸ்ய இராணுவத்தில் சேர தீவிரமாக முயற்சித்து வருவதாகவும், இலங்கையில் உள்நாட்டில் கடுமையான வறுமையின் மத்தியில் மாஸ்கோவின் பணத்திற்கு ஈடாக உக்ரேனியப் படைகளின் கைகளில் மரணத்தைப் பணயம் வைக்கத் தயாராக இருப்பதாகவும் இந்த அறிக்கையை தயாரித்த அந்த வெளிநாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் ஓய்வுபெற்ற மற்றும் தற்போதைய உறுப்பினர்களின் கூற்றுப்படி, உக்ரேனில் இலங்கையர்கள் இறந்த போதிலும், இன்னும் பலர் ரஸ்யப்படைகளோடு தங்களை இணைத்துக்கொள்ள விரும்புவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

ரஸ்ய இராணுவத்தில் சேர வாய்ப்பு கிடைத்தால், தனது பதவியை விட்டு விலகுவது குறித்து பரிசீலிப்பதாக பணியில் இருக்கும் இலங்கை ராணுவ வீரர் ஒருவர் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளதாகவும் மேற்படி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது

உக்ரேனின் இராணுவத்திற்காக இலங்கையர்களும் போராடி உயிரிழந்துள்ளனர் என்றும் டிசம்பரில், சிறப்புப் போராளிகள் பிரிவுக்கு தலைமை தாங்கிய கப்டன் ரனிஷ் ஹேவகே மற்றும் எம்.எம்.பிரியந்த மற்றும் ரொட்னி ஜெயசிங்க ஆகிய இரு இலங்கையர்களும் ரஸ்ய படைகளுக்கு எதிராக போரிட்டு கொல்லப்பட்டனர் என்பதும் கவலைக்குரிய செய்தியாகப் பார்க்கப்படுகின்றுத.

கடந்த டிசம்பர் 15 அன்று பல உக்ரேனிய வீரர்களுடன் அங்குள்ள கீவ் நகருக்கு கிழக்கே 400 கிமீ (240 மைல்) தொலைவில் உள்ள மிலினோவ் என்ற இடத்தில் ஹெவகே புதைக்கப்பட்டார், ஆனால் மற்ற இரண்டு இலங்கையர்களின் உடல்கள் மீட்கப்படவில்லை எனவும் அறியப்பட்டுள்ளது

உக்ரேனுக்காகப் போரிடுவதற்காக இலங்கை இராணுவத்திலிருந்து வெளியேறிய ஹுத்துருசிங்க என்பவரே ரஸ்யாவுடனான போரில் உக்ரைன் பக்கம் இன்னும் இணைந்திருக்கும் ஒரே இலங்கையர் என இந்தச் செய்தி எழுதப்பட்ட நேரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மதவெறியைத் தூண்டும் பிரதமர் மோடியால் இந்தியாவின் ஜனநாயகம் சிதைக்கப்படுகின்றதா?



ஒரு இனம் ஒரு மதம் ஒரு மொழி என்ற கொள்கையில் தன்னை சர்வதேசத்தின் முன் நிலை நிறுத்த முற்படும் ஒரு தேசம். தன் தரைத் தோற்றத்தில் இருந்து பல துண்டுகளாக உடையும் அபாய நிலைக்குச் சென்று விடும் என்பதே உலக அரசியல் வரலாறாக இது வரை இருந்து வந்துள்ளது.

பல மொழிகளையும் பல இனங்களையும் பல மதங்களையும் தன்னகத்தே கொண்டது மட்டுமல்லாமல் உலக நாடுகளுக்கே எதிர் காலத்தில் ஒரு வழிகாட்டியாக இருக்கும் என பல ஞானிகளால் புகழப்பட்ட இந்திய தேசம் இன்று பல சிறுபான்மை இனங்களை மத ரீதியாக மற்றும் மொழி ரீதியாக ஒடுக்குவதில் மோடி தலைமையிலான பா. ஜ. க அரசு முனைப்பு காட்டுவது இந்திய தேசிய ஒற்றுமையில் பெரும் பின்னடைவைச் சந்திக்கும் என சில அரசியல் விமர்சகர்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எக்காலத்திலும் மதரீதியாக தன்னை ஒரு இந்து நாடு என இந்தியா தன்னை நிலை நிறுத்த முற்படுமேயானால் இந்திய மத நல்லிணக்கமானது கேள்விக்கு உட்படுத்தப்படும் என்பதே இந்தியாவுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்த மகாத்மா காந்தியின் தீர்க்க தரிசனமான வார்த்தையாகும்.

ஆனால் இன்றைய சமகாலத்தில் மத வெறியைத் தூண்டி மூன்றாவது முறையாகவும் இந்த ஆண்டு 2024ல் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் எப்படியாவது ஆட்சிக் கட்டிலை பிடித்து விடுவோ என மோடி தலைமையிலான பா. ஜ. க அரசும் அதன் பரிவாரங்களும் கங்கணம் கட்டிக் கொண்டு இருப்பதானது மத வெறியர்களின் தீவிரத்துக்கு தீனி போடுவதாக இந்திய அரசியல் வல்லுனர்களால் விமர்ச்சிக்கப்படுகின்றது.

மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள் மட்டுமல்லாமல் அண்டை நாடு சீனாவுடனான எல்லைப் பிரச்சினை போன்றவற்றையும் தீர்க்க முடியாமல் தீண்டாடும் மோடி தலைமையிலான பா. ஜ. க அரசு இந்துத்துவா என்ற மத வெறிக் குரலோடு மறுபடியும் ஐந்து வருடங்களுக்கு ஆட்சியதிகாரத்துக்கான ஆணையை மக்களிடம் எதிர்ப்பார்த்து கார்த்திருப்பது மிகவும் அபத்தமானது.

என்னதான் டிஜிட்டல் இந்தியா என சர்வதேசத்தின் முன் மோடி தலைமையிலான பா. ஜ. க அரசு மார்தட்டிக் கொண்டாலும் மக்களின் அடிப்படை தேவையான மின்சாரம் கழிப்பறைகள் இல்லாத குக்கிராமங்களை இன்றும் இந்தியாவில் காணக் கூடியதாக இருப்பது மோடியின் ஆட்சியின் இயலாமையைத் தொட்டுக் காட்டுகின்றது.

வெறும் வார்த்தைப் பிரயோகங்களாலும் அரச ஊடகங்களின் பக்கச் சார்பான அனுசரனையாலும் மோடி தலைமையில் இந்தியா ஒருபோதும் வல்லரசாகிவிட முடியாது. முதலில் மதங்களுக்கு இடையிலான மொழிகளுக்கு இடையிலான மாநிலங்களுக்கு இடையிலான மனிதப் புரிதல்களை சீர் செய்து உள்வீட்டுப் பிரச்சினைகளை தீர்ப்பதன் மூலமே இந்தியா வல்லரசு என்ற இலக்கை எதிர் காலத்தில் எட்ட முடியும்.

மோடி என்ற தனிப்பட்ட விம்பத்தையும் இந்துத்துவா என்ற கொள்கையையும் மட்டும் நம்பிக் கொண்டு இந்தியாவின் ஏழுபது வீதமான வறுமையை ஒருபோதும் அகற்றி விட முடியாது. மோடியின் மதவாத கொள்கைகள் அல்லது சிந்தனைகள் தென் மாநிலங்களில் ஒருபோதும் எடுபடப் போவதில்லை என்பதும் அத்தோடு தாமரை அங்கு மலரப் போவதில்லை என்பதும் யதார்த்த பூர்வமான உண்மையாகும்.

அதிலும் தென் மாநிலங்களில் ஒன்றான தனித்துவமான தமிழ் நாட்டில் தற்போதைய சமகாலத்தில் தமிழ்தேசியம் என்றுமில்லாதவாறு விஸ்வரூபம் எடுத்து வலுப்பெற்று வருவது மத்தியில் மோடி தலைமையிலான பா. ஜ. காவுக்கு மட்டுமல்ல தி. மு. க, அ. தி. மு. கவுக்கும் பெரும் தலைவலியாகவே இருந்து வருகின்றது. அப்படி இருக்கும்போது பா. ஜ. கவினுடைய மாநிலத் தலைவர் அண்ணாமலை தலைமையில் எப்படி மோடியால் தமிழ் நாட்டில் வெல்ல முடியும்.

அம்பானி என்ற பல இந்திய கோடீஸ்வரர்களை உருவாக்குவதற்கு மோடி என்ற அரசியல் விம்பம் இந்திய கோடீஸ்வரர்களுக்கு மூன்றாவது முறையாகவும் தேவைப்படுவது ஒன்றும் இந்தியாவில் புதிதான விடயமல்ல. மோடி தலைமையிலான பத்தாண்டு கால ஆட்சி அம்பானிகளைத்தான் உருவாக் கியிருக்கின்றதே தவிர வறுமையை அல்லது ஊழலை ஒழிப்பதற்கு எந்த பொறிமுறைகளையும் இது வரை உருவவாக்கவில்லை என்பதே மோடியின் பலவீனத்தை தெறிக்க விடுகின்றது.

மோடியின் சொந்தத் தொகுதியான வாரணாசி எனப்படும் காசி இன்னும் எந்த விதமான அபிவிருத்தியும் இல்லாமல் மீளமுடியாத வறுமையில்தான் இருந்து வருகின்றது என்பதே அரசியல் ஆய்வாளர்களின் குற்றச்சாட்டாக இருக்கையில் மோடி தலைமையிலான பா. ஜ. க அரசின் பத்தாண்டுகால ஆட்சி முடிவின் சாதனையாகப் பார்த்தால் அயோத்தியில் இராமர் கோயில் கட்டியதைத்தான் கூற முடியும். அதுவும் இந்து வெறியர்களின் மனதை திருப்திபடுத்தி பா. ஜ. கவின் எதிர்கால வாக்கு வங்கியை உயரச் செய்யும் கைங்கரியமாகத்தான் பார்க்கப்படுகின்றது.

மத்தியில் ஆட்சிக்கு வரும் எந்த அரசானாலும் மதத்தின் பெயராலும் மற்றும் மொழியின் பெயராலும் இந்திய ஆட்சியதிகாரத்தைக் ஒருபோதும் கட்டமைக்காமல் அடிதட்டு மக்களின் வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்களை பூரணப்படுத்தி மாநிலங்களுக்கு இடையிலான நல்லுறவுகளை வலுப்படுத்தி சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அழிப்பதன் மூலமே இந்திய ஜனநாயகத்தை சர்வதேசத்தின் முன் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

டிஜிட்டல் இந்தியா என அரசியல் மேடைகளில் கூக்குரல் போடுவதாலும் இந்துத்துவா கொள்கை மூலம் இந்து ஆலயங்களை கட்டி எழுப்புவதாலும் இந்திய மக்களின் அடிப்படைத் தேவைகளையும் வறுமையையும் ஒருபோதும் ஒழித்து விட முடியாது. இதை பா. ஜ. க தலைமையிலான மோடி அரசும் அதன் கூட்டணிகளும் புரிந்து கொண்டால் இந்தியா 2050ல் பூகோள வல்லரசாவதை இயற்கைக்கும் தடுக்க துணிவிருக்காது.

**சாம் - ரமேஸ்குமார்**

# மன்னாரிலிருந்து தமிழகம் சென்ற குடும்பஸ்த்தர் தெரிவிப்பு

## கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களின் பயன்பாடு அதிகரிப்பு – குழந்தைகளுக்கு பாதுகாப்பாக இல்லை



மன்னாரிலிருந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் அகதிகளாக படகில் சென்று கடந்த 29ம் திகதி வெள்ளிக்கிழமை காலை தனுஸ்கோடி மணல் திட்டிற்கு சென்று இறங்கியவர்களை மீட்ட இந்திய கடற்படையினர் மண்டபம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை செய்ததில் பொருளாதார நெருக்கடி மற்றும் போதை பொருட்களின் பயன்பாடு அதிகமானதால் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பதால் தமிழகம் சென்றதாகத் தெரிவித்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தனுஸ்கோடி கடல் வழியாக கடந்த 2022ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இலங்கை தமிழர்கள் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் மன்னர் மாவட்டம் திருக்கேதீஸ்வரம் பகுதியைச் சேர்ந்த முருகானந்தம் அவரது மனைவி ரீட்டா மேரி மற்றும் அவர்களது இரண்டு குழந்தைகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் இலங்கையிலிருந்து படகு மூலம் புறப்பட்டு தனுஷ்கோடி ஒன்றாம் மணல் திட்டில் சென்றிறங்கினர்.

மணல் திட்டில் நின்று கொண்டிருந்த இலங்கை தமிழர்கள் நால்வரை மண்டபம் இந்திய கடலோர காவல்படை ஹோவர் கிராப்ட் ரோந்து கப்பலில் மீட்டு தனுஷஸ்கோடி அரிச்சல்முனை அழைத்து வந்து ராமேஸ்வரம் மெரைன் போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

ஒப்படைக்கப்பட்ட நால்வரையும் விசாரணைக்காக மண்டபம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் விசாரணைக்குப் பின்னர் இலங்கை தமிழர்களை மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர்.



இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தினசரி ஒரு குடும்பத்தில் ஒரு நேரம் மட்டும் சாப்பிட முடிவதாகவும், இலங்கையில் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதால் குழந்தைகளை வைத்துக் கொண்டு பாதுகாப்பாக வாழ முடியாததால் தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக இலங்கை தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்திற்கு இலங்கையிலிருந்து சென்ற அகதிகளின் எண்ணிக்கை 500 த் தாண்டுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு புதிய பத்து மாடிக் கட்டடம்

## புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பை எதிர்பார்க்கும் பணிப்பாளர் சத்தியமூர்த்தி



யாழ் போதனா வைத்திய சாலையில் 10 மாடியில் புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக யாழ்ப்பாண வைத்திய சாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

கடந்த 29-03-2024 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போதனா வைத்திய சாலையின் அபிவிருத்தி குழு கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தினமும் அதிகளவிலான நோயாளிகள் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சை பெற்று வரும் நிலையில் விடுதிகளிலும் அதிக-ளவிலானோர் தாங்கி நின்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதன் காரணமாக ஏற்பட்டுள்ள இட நெருக்கடி காரணமாக 10 மாடியில் புதிய கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது.

புதிய கட்டடத்தை அமைப்பதற்கான வரைபடம் தயாரிக்கப்பட்ட நிலையில் அடுத்த கூட்டத்தில் அதனை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கிறேன்.

புதிய கட்டடத்தை கட்டுவதற்கு பாரிய நிதி செலவு செய்ய வேண்டிய சூழ்நிலையில் எமது புலம் பெயர் வர்த்தகரான ராஜ் ராஜரட்ணம் அவர்கள் ஒரு தளத்திற்கான முழுமையான செலவை வழங்குவதற்கான சாதகமான பதிலை வழங்கியுள்ள நிலையில் அவரைப் போன்று பலர் உதவி வழங்குவார்கள் என எமது யாழ்ப்பாண வைத்தியசாலைச் சமூகம் எதிர்பார்க்கின்றது.

அரசாங்கத்திடம் புதிய கட்டடத்திற்கு தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு வரி விலக்கை கோரி பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளையும் சம்பந்தப் பட்டவர்களிடம் கலந்துரையாடியுள்ளோம்.

ஒரே தடவையில் பத்து மாடிகளையும் கட்டி முடிக்காவிடினும் ஆகக் குறைந்தது ஐந்து தொடக்கம் ஆறு மாடிகளையாவது கட்டி முடித்தால் இட நெருக்கடி குறைந்துவிடும்.

ஆகவே புதிய கட்டடத்துக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியம் எனவும் குறிப்பாக புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் ஒன்றிணைந்த பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டார்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கணகம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# தமிழரசுகட்சியின் ஆதரவு இன்றி ஜனாதிபதியாக எவரும் வரமுடியாது என்று "வாயால் வடை சுடும்" சாணக்கியன்

– கனகராசா சரவணன் –

இந்த வருடம் இரண்டு தேர்தல்கள் வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது இதில் எந்த தேர்தல் முதல்வரும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவிற்கு மட்டுமே தெரியும் எனவே அடுத்த ஜனாதிபதியாக வர நினைக்கின்ற எவருமே தமிழரசுகட்சியின் ஆதரவு இன்றி ஜனாதிபதியாக வரமுடியாதளவிற்கு தமிழரசு கட்சியையபலப்படுத்திக் கொள்வது தான் எங்களுக்கு தற்போது இருக்கும் பொறுப்பு என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 126 ஜனனதினத்தையிட்டு 31-03-2024 ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழரசுக்சி ஏற்பாட்டில் ஆஞ்சலி செலுத்தும் நிகழ்வு மட்டக்களப்பில தந்தை செல்வா பூங்காலில் இடம்பெற்றது. இதன் போது அவரது திருஉருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி விளக்கேற்றி அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை தமிழரசு கட்சியின் முதலாவது மாநாட்டில் எந்தொரு சந்தர்பத்திலும் நான் எங்கள் மக்களையும் மண்ணையும் பாதுகாக்கும் வகையில் செயற்படவேண்டும் இல்லாவிடில் எங்கள் மக்களுக்கும் மண்ணுக்கும் எதிரான விடையத்தையும் செய்யக்கூடாது இதை பாதுகாப்பது தான் கட்சியின் பிரதானமான பொறுப்பு என தந்தை செல்வா சொன்னார். அன்று தொடக்கம் இன்று வரைக்கும் 75 வருடங்களுக்கு மேலாக இந்த மக்களுக்காக அரசியல் ரீதியாக தொடர்ச்சியாக குரல் கொடுத்துவரும் ஒரு கட்சி தமிழரசு கட்சி மட்டும்தான்.

இன்று தமிழ் தேசிய அரசியலிலே கொலை கற்பழிப்பில் ஈடுபட்ட, கட்சிகளும் தாங்களும் தமிழ் தேசிய கட்சிகளாக காட்டிக்கொள்ள முயற்சித்திருந்தாலும் கூட இதில் போலியும் நல்லதும் இருக்கின்றது அவ்வாறு தமிழ் தேசிய பரப்பில் போலிகட்சிகளும் இருக்கின்றது ஆனால் தமிழருசுகட்சிதான் நல்ல கட்சி என அனைவருக்கும் தெரியும்.

இந்த வருடம் இரண்டு தேர்தல்கள் வரும் இருந்தபோதும் இலங்கை சட்டத்தின்படியும் அரசியல் அமைப்பின்படி முதலாவது ஜனாதிபதி தேர்தல்தான் வரவேண்டும். அதேவேளை இலங்கையில் நடக்கும் ஒரே ஒரு தேர்தல் மட்டும்தான்



தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைத்து செய்யக் கூடிய ஒரு தேர்தல் ஜனாதிபதி தேர்தல் இதஜல் எதிர்வரும் 6ம் மாதத்தின் பிற்பாடு ஜனாதிபதியின் பொறுப்புக்கள் அனைத்தும் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்.

உள்ளூராட்சி மாகாணசபை தேர்தல் பிற்போட்டது போல ஜனாதிபதி தேர்தலும் பிற்போட முயற்சி எடுக்கலாம் ஆனால் அவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதி தேர்தல் தான் வரவேண்டும். ஆனால் ஜனாதிபதி ரணிலுக்கு தேர்தலில் தான் வெல்லக் கூடிய சூழ்நிலை இல்லாமல் போய்விடும் தனக்கு ஜனாதிபதியாக வரமுடியாத ஒரு சூழல் அமையலாம் என ஒரு சிந்தனை ஜனாதிபதிக்கு வந்தால் அரசியல் அமைப்பின்படி பாராளுமன்றத்தை எப்பவேண்டும் என்றாலும் கலைக்கலாம்.

இவ்வாறான சூழிநிலை இரண்டரை வருடம் பூர்தியானதன் பிற்பாடு நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்கு போகலாம் எனவே இந்த இரண்டு தேர்தல்களும் இந்தவருடம் வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது இதில் எது முதல்வரும் என ரணில் விக்கிரமசிங்காவிற்கு மட்டுமே தெரியும்.

எனவே இந்த நேரத்தில் தமிழரசு கட்சிக்கு என்ன பொறுப்பு இருக்கின்றது என்றால் 1977க்கு முதல் தொகுதிவாரியாக நடந்த 1960ம் ஆண்டு மாச் மற்றும் யூலை மாதத்தில் ஆகிய இரண்டு தேர்தல்களில் மாச்சில் நடந்த தேர்தலில் டட்லி சேனநாயக்காவின் ஆட்சியிலே தமிழ் மக்களுக்கு எதிரான சில தீர்மானங்கள் வருவதன் காரணமாக அந்த ஆட்சி மாற்றம் உருவாகுவதற்கு தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தான் காரணம் அப்போது தமிழர்களுக்கு பாதகமான நிலைவரும் போது மாற்றம் செய்யக் கூடிய அதிகாரம் இருந்தது.

அதனை தொடர்ந்து 60 யூலையில் இடம்பெற்ற தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தார் அதனை தொடர்ந்து 1965 இடம்பெற்ற தேர்தலில் தமிழரசு கட்சியின் ஆதரவுடன்தான் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி அமைக்கப்பட்டது அதில் செனட்டராக திருச்செல்வம் இருந்தார்.

இந்த விடையங்களை வைத்து பார்க்கும் போது 2015ம் ஆண்டு நல்லாட்சியில் தமிழ் மக்களின் தேவை இருந்தது எனவே இந்த தேர்தல் வரும் நிலையில் தமிழரசுகட்சி வாக்குகளை எடுப்பதன் மூலம் 60ம் ஆண்டு எவ்வாறு நாங்கள் நினைத்தால் ஆட்சி மாற்றத்தை கொண்டுவரமுடியும் என்ற சூழல் இருந்ததே அதேபோல மீண்டும் ஒரு ஆட்சி அதிகாரத்தை கூட மாற்றக்கூடியளவிற்கு எங்களை நாங்கள் பலப்படுத்தி கொள்ள வேண்டும்.

2020 கோட்டா பகிரங்கமாக நான் சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என சொன்னார் அவரே அகதியாக ஓடவேண்டிய சூழல் ஏற்பட்டது அதேவேளை இதே ஒரு நாளில் ஈஸ்ரர் குண்டுவெடிப்பு இடம்பெற்றது இந்த குண்டுவெடிப்பிற்கு அபிவிருத்திக்குழு தலைவராகவும் இராஜாங்க அமைச்சராகவும் இருக்கின்ற சிவநேசதுரை சந்திரகாந்தன் கொலை செய்ததான குற்றச்சாட்டுக்கள் சனல்4 முன்வைக்கப் படுகின்றது.

இவ்வாறு மட்டக்களப்பில் மண்ணையும் மக்களையும் அழிக்கின்ற கட்சி இவர்களுக்கு 2020 மாவட்ட மக்கள் சில பொறுப்புக்களை வழ்ங்கியுள்ளனர் இதை மக்கள் உணர வேண்டும்.

எனவே நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் காலங்களில் வாக்கு வங்கியை எவ்வாறு அதிகரிப்பது எங்களுடைய ஆதரவு இல்லை என்றால் அடுத்த முறை ஜனாதிபதியாக வர நினைக்கின்ற எவருமே ஜனாதிபதியாக வரமுடியாதளவிற்கு தமிழரசு கட்சியை பலப்படுத்திக் கொள்வது தான் எங்களுக்கு தற்போது இருக்கும் பொறுப்பு என்றார்.

# கனடாவில் தனது வெற்றிகரமான 20 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து தொடர்ந்து சேவையாற்ற உறுதிபூண்டுள்ள அஞ்சப்பர் செட்டிநாடு உணவகம்

AR

## ANJAPPAR

*Authentic Chettinadu Restaurant*

**கனடாவில் பாரம்பரிய செட்டிநாடு உணவு வகைகளை எமது 3 கிளைகளிலும் சுத்தம் சுகாதாரம் சுவை ஆகியவற்றுடன் வாடிக்கையாளர்களுக்கு படைப்பதில் பூரிப்படைகின்றோம்.**

கனடாவில் இயங்கிவரும் கிளைகளோடு எமது நிர்வாகத்தின் கீழ் தமிழ்நாட்டின் 2 கிளைகள் சென்னை - அண்ணா நகரிலும், சேலம் நகரிலும் அனைத்து வசதிகளோடு சிறப்பாக இயங்கிவருகின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை எமது கனடிய வாடிக்கையாளர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

எமது அஞ்சப்பர் செட்டிநாடு உணவகத்தின் “மூலகர்த்தா” ஐயா அஞ்சப்பர் அவர்கள் மறைந்த முன்னாள் தமிழக முதல்வரும் மக்கள் திலகமுமான M.G.R. அவர்களின் தனிப்பட்ட சமையல் வல்லுனராகத் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது வெற்றிகளுக்கு காரணமாக அமைந்துள்ள வாடிக்கையாளர்கள். பத்திரிகை மற்றும் வானொலி நிறுவன நண்பர்கள். எமது அனைத்து கிளைகளிலும் ஆர்வத்துடன் பணிசெய்யும் அனைத்து தரங்களையும் சேர்ந்த சமையல் வல்லுனர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எமது நன்றி!

இங்ஙனம்,
ரங்கசாமி அஞ்சப்பர் மற்றும்
கோபால் ஆறுமுகம்

**எமது 3 கிளைகள் அமைந்துள்ள இடங்கள்:**

**Scarborough நகரில்:**
3090 Eglinton Ave East
Scarborough, ON M1J 2H1
(416) 265-2695

**Mississauga நகரில்:**
4310 Sherwoodtowne Blvd, Unit 1
Mississauga, ON L4Z 4C4
(905) 272-2232

**Brampton நகரில்:**
Bartley's Square
1 Bartley Bull Pkwy #5
Brampton, ON L6W 3T7
(905) 450-7575

**www.anjapparcanada.ca**

For All Your Traveling Needs
Cheapest Air Fare In Town
Please call Mr. Lavan
Lowfare
travels and tours
Phone: 416.261.0555
2625 Eglington Ave East
Scarborough, Ontario
M1K 2S2


# தேசம்

NATION THE THESAM

RE/MAX ACE
REALTY INC, BROKERAGE

Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
toronto.baskaran@gmail.com

Issue - 01 Once a Month March




## மதவெறியைத் தூண்டும் பிரதமர் மோடியால் இந்தியாவின் ஜனநாயகம் சிதைக்கப்படுகின்றதா?

பக்கம் 15

## சட்டத்தின் பிரகாரம் தேர்தலை நடத்த வேண்டியது இலங்கை ஜனாதிபதியின் கடமை

பக்கம் 03





## மக்கள் எதிர்கொள்ளும் பாரிய துன்பங்களுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டுமாக இருந்தால் இலங்கையின் ஆட்சி முறைமையில் பாரிய மாற்றம் தேவை

பக்கம் 06

பக்கம் 16

## யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு புதிய பத்து மாடிக் கட்டடம்

